இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?

வித்வான்
மறை. திருநாவுக்கரசு.

இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?

இஃது

ஆசிரியர் மறைமலையடிகளின் (சுவாமி வேதாசலம்)
புதல்வரும், கட்டாய இந்தியை எதிர்த்துத் தமிழா
சிரியர் வேலையைத் துறந்து சிறை சென்ற
வரும் ஆன தோழர் வித்துவான்

மறை. திருநாவுக்கரசர் அவர்களால்
இயற்றப்பட்டது.

சேலம் செவ்வாய்ப்பேட்டை

ராயல் பிரிண்டிங் ஹவுஸ்ஸில் பதிப்பிக்கப்பட்டது

பதிப்புரிமை 1939. நான்கணா

நூல்மாலைச்சூட்டு.

தமிழ் மொழியை ஒழிக்கக் கட்டாய இந்தி வரப்போகின்றதென்றும், அதனை எதிர்த்தொழிக்கத் தமிழரனைவரும் ஒன்று கூட வேண்டுமென்றும் சென்ற மூன்றாண்டு கட்கு முன்னரே துண்டு வெளியீடுகள் பலவற்றால் என்னை முதன் முதலில் விழிப்புறச் செய்தவரும், தமிழ்ப் போரில் என்னைப் போர் மறவனாக்கிய வரும், தமிழ் மொழி விடுதலைப் போரில் தனி ஆணையராகச் (சர்வாதிகாரி) சிறை சென்றவரும், தமிழரியக்கத் தலைவரும் ஆன, உயர் திருவாளர். ஈழத்துச்சிவானந்த அடிகள் பி. ஏ. அவர்கட்கு என் அன்பான நன்றியறிதலைத் தெரிவிக்கும் முகத்தான் இந்நூலாம் மாலையை அவர்கட்குச் சூட்டுகின்றேன்.

இந்நூலின் பகுதிகள்.

(பொருளடக்கம்)

எ.		பக்கம்
1.	முகவுரை	
2.	மதிப்புரைகள்	
3.	சேர்ப்புரை	
4.	தோற்றுவாய்	1
5.	நாட்டுரிமையும் மொழியுரிமையும் ஒன்று பட்டிருப்பதே உண்மையான உரிமையாகும்	7
6.	தாய்மொழி முன்னேற்றமே தாய்நாட்டு மக்கள் முன்னேற்றம்.	8
7.	தாய் மொழியில் கலைகளைக் கற்றலே மக்களை எளிதில் உயர்த்தும் சீரியவழி	10
8.	கட்டாய இந்தியால் பயன் என்ன?	13
9.	நடு மன்னவையும் இந்தியும்	14
10.	கட்டாய இந்தியால் சிறிதேனும் நன்மை உண்டா?	17
11.	ஆங்கிலத்தால் தமிழ் கெடுங்கோலம்	19
12.	வட மொழியால் தமிழ் கெட்டவரலாறு	22
13.	தனித் தமிழ்ப் போர்	24
14.	பிறமொழிக் கலப்பால் தமிழ் கெட்டு மலையாள மொழி தோன்றிய வரலாறு	25
15.	மொழியழிவே நாட்டழிவு	30
16.	வட மொழியால், தமிழ்க்கலை, நாகரீகங்கள் அழிந்த வரலாறு	30
17.	கட்டாய இந்தியின் நோக்கம்	32
18.	தமிழ்க் கலைகள் எங்கே?	36
19.	தமிழ் ஒலிகளும், எழுத்துக்களுங் கொலை செய்யப்படல்	37
20.	அரசியல் மொழியே ஆக்கம்பெறும்	40
21.	இந்தியால் வடநாட்டவர் உயர்வார் தமிழர் தாழ்வர்	43
22.	இந்தியால் தமிழ் கெடும்	45

முகவுரை.

இந்தியால் தமிழ் எவ்வாறுகெடும்? என்பதை அறிஞர் அறிவர்; தமிழை உயிரென மதிப்போரும் அறிவார்கள். ஆனால், காங்கரசிலுள்ள தமிழர் பலர் அதனை அறியவில்லை. இந்தியால் தமிழ் கெடும் வகையினை எம் சொற்பொழிவினால் விளக்கமாகக் கேட்டறிந்த தமிழ் நாட்டுத் தலைவர் சிலரும், அன்பர் பலரும் அதனை நூல் வடிவில் வெளியிடுமாறு வற்புறுத்தினர். அவ்வற்புறுத்தலின் பயனே இச்சிறு நூல்.

தமிழ்த்தாயின் விடுதலை பெறுவதற்குப் போர் புரியும் போர்க்களமாம் சிறைச்சாலையினின்றும 8—2—39 ஆம் நாள் வெளிவந்தோம். அன்றுமுதல் இன்றளவும் எம்மால் இயன்றவளவு தமிழுக்கும், தமிழருக்குமாகத்தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் இடைவிடாது தொண்டு செய்து வருகிறேம். இதற்கிடையில் இச்சிறுநூல் வெளிவர இறைவன் அருள்செய்தான். எனவே போதிய நூல்களும், காலமுங் கிடைக்காமையால் இச்சிறு நூலில் குற்றங் குறைகள் பல நேர்ந்திருக்கலாம். (கருத்துக்களில் அல்ல) அவற்றினுக்காக அறிஞர்கள் அன்பர்கள் என்னை மன்னிப்பார்களாக.

எம் வேண்டுகோட்கிணங்கி இந்நூலுக்கு மதிப்புரை வழங்கிய தமிழ்த் தலைவர்களுக்கு என் மனமார்ந்த வணக்கங்கள் உரியனவாகும். இந்நூலை எழுதியதுதான் என் வேலை. இந்நூல் வெளியாவதற்கு முன்னின்று உழைத்த பெருமை சேலம் செவ்வாய்ப்பேட்டை பைந்தமிழ்க் கழகத் தலைவர் திருவாளர் ஆ. மாணிக்கம் அவர்கட்கு உரியதாகும். அரிய தமிழ் நூல்கள் பலவற்றைச் சலியா ஆர்வத்துடன் தம் சொந்தச் செலவில், எளிய விலையில், அழகிய முறையில் வெளியிட்டுதவும் அவர்கட்கு எம் நன்றியறிதலான அன்பு மட்டுமல்ல, தமிழ் மக்களின் அன்பான நன்றியதலும் உரியனவாகும். இவ்வெளியீட்டைத் தமது போலெண்ணித் தமது எழுத்தகத்தில் (அச்சுக்கூடம்) பதிப்பிட்டுதவிய தோழர் ந. வீ. ராகவன் அவர்கட்கும் எம் மனமார்ந்த அன்பும் நன்றியும் உரியதாகும்.

39 வில்லேஜ் ரோடு
நுங்கம்பாக்கம்
சென்னை.

மறை. திருநாவுக்கரசன்.

மதிப்புரைகள்.

தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் பேராசிரியர் (எம் ஏ பட்டம பெற்றவரும், சட்ட நூற் பெரும்புலமைக்காகத் 'தாகூர் சட்ட விரிவுரையாளர்' (Thagore Law Lecturer) என்ற பட்டமும் பதினுயிரம் வெள்ளிகள் (ரூபா) பரிசு பெற்றவரும், சென்னைச் சட்டக கல்லூரியிலும், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திலும் பேராசிரியராக இருந்தவரும், அரிய ஆராய்ச்சிகள் நிறைந்ததமிழ் நூலகள் பலவற்றை வெளியிட்டுத் தமிழகத்தை உயர்த்திவருபவரும் ஆன

உயர்திருவாளர்

கா. சுப்பிரமணிய பிள்ளை எம் ஏ. எம். எல்.

அவர்கள் எழுதியது.

"வித்வான் மறை. திருநாவுககரசு அவர்கள் எழுதிய 'இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்' என்ற நூலினைப் படித்தப்பார்த்தேன். அது தமிழ்ப் பாதுகாப்புக்காகத் தமது வாழ்க்கையை முற்றிலுங் கொடுத்துத் தமது ஊதிய வேலையை யிழந்து சிறைசென்ற ஒருவரது அரிய உணர்ச்சியின் பயனுக வெளிவந்துள்ளது. அந்நூலுள், நாட்டுப் பற்றிற்கு மொழிப்பற்று அடிப்படையென்பதையும், நாட்டு மக்களின் வாழ்க்கை வளர்சசிக்கு நாட்டு மொழி வளர்ச்சி இன்றியமையாததென்பதையும், நாட்டு மொழிக்குப் பிற மொழிக் கலப்பு எவ்வாறு இடையூறு விளைப்பது என்பதையும் இங்நாட்டிலும மேல் நாட்டிலும் உள்ள பல எடுத்துக் காட்டுகளால் அந்நூல் ஆசிரியர் மறுக்கமுடியாதபடி திட்டமாகவும் நுட்பமாகவும் விளக்கியுள்ளார்.

தமிழின் தனிச்சிறப்பும், அதன் கலைவளர்சசி தமிழ் நாகரிகம் பேணுவதற்கு ஒரு தலையாய் வேண்டப்படுவதென்பதும் அதனுள் இனிது விளக்கப்பெற்றன. யாவர்க்கும் விளங்கக்கூடிய இனிய எளிய செந்தமிழ் நடையில் அந்நூல் எழுதப்பட்டுள்ளது. தமிழன்பர்கள் அந்நூலைக் கற்று அதன் கருத்துக்களை எங்கும் பரவசெய்தலே ஆசிரியர் உழைப்பிற்குத் தக்க கைமாறுகும்.

கா. சுப்பிரமணிய பிள்ளை

14. ஏ. ராசாபாதர் முதலி தெரு,
தியாகராய நகர், சென்னை.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரிய ராயிருந்தவரும், தமிழரியக்கத் தலைவரும் ஆகிய

உயர்திருவாளர்

எஸ். சோமசுந்தர பாரதியார்

எம். ஏ. பி. எல். அவர்கள் எழுதியது.

"உயர்திரு மறைமலையடிகளின் திரு மகனர் வித்துவான் திருநாவுக்கரசுப்பிள்ளை எழுதி வெளியிட்டுள்ள "கட்டாய இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?" எனும் உறழ்ந்தாராய்ந்த புத்தகத்தைப் பார்த்தேன். தமிழப் புலமை தலை நின்ற அடிகளின் மகனுரை அறிவாருக்கு அவராக்கிய நூலின் அழகும் செவ்வியும் வியப்பை விளையா. இனிய எளிய தமிழ் நடையும், செறிந்து உறழும் வாதமுறை பிறழாப் பொருள் வாய்ப்பும் பொருந்தியது இப்புத்தகம். கட்டாய இந்தியை எதிர்க்கும் என் அபிப்பிராயம் இந் நூலுக்கு மிகையேயாம். என்போலவே இந்தியை வேண்டாத்தீர்ப்பாய் சுமத்து முன் வரை, திருநாவுக்கரசரும் காங்கிரஸ் கக்ஷியில் நின்றுழைத்தவர். நாட்டன்பு மொழியழித்தல் ஆகாமையால், தமிழ்ப்பேணி அமைச்சரோடு முரணி அறப்போர் தொடுத்து, வலியோர் வன்கண்மையால், பலவாறு அல்லலுக்காளாகி, வாத்திமைத் தொழிலும் வருவாயுமிழந்து, தருக்கிய சிறை வாழ்வு மகிழ்ந்தேற்று, வீறுபெற்ற பெருமை பெற்றவர் இவர். இத்தகையார் அறிவோடு அனுபவமும் காட்டிய பல ஏதுக்களாலும், தமிழை இந்திப்பகை அடியறுக்கும் வழியனைத்தும் பிடிவாதமில்லாதாரெல்லார்க்கும் எடுதது விளக்குமிப் புத்தகம், தற்கால மொழிப் போரில் நடு நிலையில் உண்மை காணவிரும்புவோரெல்லாரும் ஊன்றிப் படிக்க உதவும் பெற்றியது. இதனை தமிழர் ஆதரிப்பாராக."

பசுமலை
27-9-39.

சோமசுந்தர பாரதி.

தஞ்சாவூர்க் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவரும், தமிழறிஞர், அனபர் அனைவராலுஞ் "செந்தமிழ்ப் புரவலா" "தமிழவேள்" எனப் பாராட்டப்பெற்றவரும, தமிழரியக் கத்தலைவரும் ஆன

உயர்திருவாளர்

இராவ்சாகிப் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை,

பி. ஏ. பி. எல். அவர்கள் எழுதியது.

காங்கிரசுக் கட்சியினர் தென்னாட்டில் அரசியல் தலைமையில் அமர்ந்தவுடன் சின்னஞ்சிறு மாணவர்கள் இந்தி மொழியைக் கட்டாயப்பாடமாகப் பயிலவேண்டுமெனக் கட்டளையிட்ட தன் காரணமென்னை? தமிழ் நாட்டு மக்களில் பெரும் பகுதியினர் எழுத்தறியாத நிலையிலிருக்கவும், இவ்விழி நிலையினின்றும் அவர்களை உயர்தத தாய்மொழிக் கல்வியில் அவர்களைவலிந்து பயிலசெய்யா தொழிந்த தன் கருத்து என்னை? தமிழ் நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்களை நூற்றுக் கணக்காக மூடிவருவது கல்வியை வளர்க்கும் பொருட்டா? என்ற சிந்தனைகள் எழுகின்றன. இநதிமொழி வடநாட்டின் சிற்சில பகுதிகளில வழங்கி வரும் கொசசை மொழிதானே! உயர்தனிச்செம மொழிகளுக்குரிய பண்புகள், இலக்கிய இலக்கணச் சிறப்புகள் இந்திமொழி அறியமாட்டாதே! ஆங்கில மொழியிற்காணும் கலைசசெல்வஙகளில் ஒரு சிறுகூறு கூட இந்தியில் இல்லையே! இந்திய நாடு தன்னரசு நாடாகுங்கால், நாட்டினர் ஒருங்கு சேர்ந்து பேசுவதற்குப் பொது மொழி வேண்டுமாம! கை விரல் விட்டெண்ணக் கூடிய தமிழ் நாட்டினர் பொது மன்றத்தில் பேசுவதற்கு நாட்டிலுள்ள மக்கள் அனைவரும இந்திபயில வேண்டுமென கட்டாயப்படுததவும் வேண்டுமா? மக்கள் அனைவரும் ஒருமைப்படுத்தற்கு பொது மொழி வேண்டுமாம்! தமிழ் மொழியே பேசுகின்ற தமிழ் மக்களுள்ளே சாதிச்சமயப்பூசல்கள் எண்ணி

றந்திருப்பது கண்கூடாயிற்றே! இவை யொன்றும் கருத்திற்குப் பொருந்து மாறில்லை. தென்னாட்டுத் தலைவர்கள் வடவர்களின் நன்மதிப்பைப் பெறுவதற்கு அவர்கள் உவக்கும் கருமங்களைச் செய்யத் தலைப்படுகின்றனர். வடவர்களின் பெயரைப் பொது நிலையங்களுக்குச் சூட்டுகின்றனர்! வடவர்களைப் போல் ஆடைகளணிந்து தமமை ஒப்பனை செய்கின்றனர்! வடவர்களின் மொழி தமிழ் நாடு வேண்டாதிருந்தும், இந்தி மொழி தென்னாட்டில் வேரூன்றவும், ஆட்சியில் வளரவும் பெருமுயற்சிகள் செய்கின்றனர்! இந்தி மொழியால் தமிழ் நலம கெடுமென தமது உளங்கொண்ட கொள்கையை வெளியிட்டால் கொடுங்கோன்மையில் ஆண், பெண், முதியர் சிறியர் அனைவரையும சிறையிலிட்டு வன்கண்மை புரிகின்றனர். இவ்வாறெல்லாம் அறநெறி பிழைத்துக் கொடுஞ்செயல்களைப் புரிந்து தமிழ் மொழியைச் சிதைத்து, வேற்று மொழியை ஆட்சியிற்கொணர்ந்து நாளடைவில் தமிழ் மொழி வழக்காறொழிவதற்கு அடிகோல்பவர் தமிழர்களே! இதன் விளைவுகளை ஆழ்நது சிந்திக்க, உள்ளம் நடுங்குகின்றது. அரசியலில் பதவி பெறவேண்டுமெனும் ஆசையால் விழுங்கப்பட்ட ஒரு சிலர் தமிழரின் மொழிச் செல்வத்தையும், ஒப்புயர்வற்ற நாகரீகச சிறப்புகளையும் அழிப்பதற்கு மேற்கொண்டிருக்கும் முயற்சிகளுள் 'கட்டாய இந்தி' முதன்மையானது. மொழிமதுகையில் சிறக்கும் நாடுகள் வளம் பெற்றோங்குவதும், மொழி மதுகை சிதையும் நாடுகள் பீடழிநது நிலைதளர்வதும் சரித நூல் கண்ட உண்மை. கட்டாய இந்தியால் விளையும் கேடுகள் யாவை யெனத்தமிழ் மக்கள் அறிந்து கொள்ள வேண்டுவது மிகமிக இன்றியமையாதிருக்கின்றது. இநதியால் தமிழ் மொழி கேடுறுது என மந்திரிக்கூட்டத்தினர் பேசுவதில் உண்மை ஏதேனும் இருக்கின்றதாவென தமிழ் மக்கள் ஆய்ந்து தெளிய வேண்டும். தமிழ் மக்கள் அரசியல் பதவிகளில் மோகங்கொண்டு இந்திப் பித்தர்களானால் தமது எண்ணங்கள் திரிந்து, கொள்கைகள் மாறுபட்டு, நடை, உடை, பாவனைகள் வேறு பட்டு, சொல் இழந்து வேற்று மனிதர்

ஆய்விடுவர். தமிழர் இருப்பதா? இறப்பதா? என்பதே இற்றை நாளில் நடந்து வரும் விவாதத்தின் முடிபாகும்.

ஆதலால் வித்துவான் திரு. மறைதிருநாவுக்கரசு அவர்கள் 'இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்' எனும் நூலை இயற்றித்தந்தது காலத்தினாற் செய்த பேருதவியாகும். இருதிறத்தினரின் வாதங்களின் வன்மை, மென்மைகளை நடுநின்று ஆய்ந்து முடிவு கண்டிருக்கின்றனர். ஐயந்திரிபுகளால் மயங்கி உண்மை காணமாட்டாத தமிழ் மக்களைத் தெருட்டி அவர்களை நல்வழிப் படுத்துதற்கான அரிய நூல். ஆங்கிலம், ஆரியம் ஆதிய மொழிக் கலப்பினால் தமிழ் மொழி அடைந்திருக்கும் சீர்கேடுகளை நன்கு விளக்கியிருக்கின்றனர். தமிழ் மக்களின் சீரிய நாகரிகப்பண்புகள் நாளடைவில் சீர்குலைந்து மறையவும், அயலவர் கொள்கைகள் இங்கு வேரூன்றவும், இத்தகைய மாறுதல்களால் தமிழ் மக்கள் பீடழிந்து அடிமை வாழ்வில் தாழ்த்தப்பட்டதும் அங்கையில் நெல்லிபோல் காட்டப்படுகின்றது. கல்வி நிரம்பாத மக்களும் எளிதே பொருளுணரும் வண்ணம், செவ்விய நடையில், நல்ல ஏதுக்களாலும், எடுத்துக் காட்டுகளாலும் விளக்கித் தமிழ் மொழியும் தமிழர் நாகரீகமும், தமிழ் மக்களும் கேடுபடும். கேடுபடுவார் என நிறுவியிருக்கின்றனர்.

அயன் மொழியையும், அயலவர்கள் கொள்கையையும் கைக்கொண்டமையால் மலையாள நாட்டினரும், கன்னடநாட்

டினரும், தெலுங்க நாட்டினரும், தமது மொழி தமிழுடன் தொடர்பற்ற தென்றும், தமது நாடு வேற்று நாடு என்றும், தமிழர் தம்மினும் வேறு வகையினர் என்றும் நினைத்துக் கலாமிடுவது கண்கூடு.

இந்த நூல் மிகவும் பயனளிக்க வல்லது. மிகவும் பொருட் செறிவுடையது. தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் கற்கவேண்டுவது. ஆய்ந்து தெளிய வேண்டுவது. தமது தனியுரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென எண்ணும் தமிழர் அனைவரும் பொன்னேபோல் போற்றிப் பொருளறிய வேண்டுவது. காலத்தின் நிலையையும், தமிழ் மக்களின் எளிமையையும், மயக்க உணர்வினையும் அறிந்து இப்பொருளுரையை உதவிய வித்துவான் அவர்கட்கு தமிழுலகின் நன்றியும் கடமையும் உரியதாகும்.

ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ் செல்வம் உற்றக்கடை. (குறள்)

கார்த்திகை
2—10—39 } த. வே. உமா மகேசுவரன் பிள்ளை.

இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்.

தோற்றுவாய்.

சென்னை மாகாணத் தலைமை அமைச்சர், மாண்புமிக்க இராசகோபாலாச்சாரியார் அவர்கள், வட நாட்டுத் தலைவர் சிலர்க்குத் தாம் ஓர் உறுதிமொழி கொடுத்திருப்பதாகத் தாமே கூறியிருக்கின்றார். அவ்வுறுதிமொழியை நிறைவேற்றுதற்பொருட்டுத் தாம் அமைசசேற்றவுடன் தமிழ்ப் புலவர்களைக் கலந்துகொள்ளாமல், கல்வித் துறையில் வல்லவர்களது கருத்தைக் கேளாமல், தமிழ் மக்களின் வாய்மொழியை வேண்டாமல், சட்டசபை உறுப்பினர்களோடு சூழாமல் காங்கரசுக் கழகங்களின் கருத்தைக் கேட்காமல் தனியாணை (சர்வாதிகாரம)யாகத் தமிழ் நாட்டில் இந்தியைக் கட்டாயப் பாடமாகப் புகுத்தினார்கள்.

அது கண்டு இன்று வரையில் அரசியலில் கலவாத தமிழில் பெரும்புலமைபடைத்த ஆசிரியர் மறைமலையடிகள் உயர் திரு. ஞானியார் சுவாமிகள, கா. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ. எம். எல்., டாக்டர் சாமிநாதய்யர், பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டார், பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் முதலியவர்களும், ஏனைய தமிழ் புலவர்கள் அனைவரும், தமிழில் பெரும் புலமைபடைத்த சோமசுந்தர பாரதியார் போன்ற சிறந்த காங்கரஸ்காரர்களும், தமிழில் ஆர்வமுடைய தமிழ் மக்கள் யாவரும் கட்டாய இநதியால் தமிழ் கெடும் என்று வீறிட்டெழுந்தனர், உள்ளங்கொதித்தனர். ஆனால் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பார்ப்பனர்கள் அதனை ஆர்வமுடன் வரவேற்றனர், அம்மொழி ஆரிய நாகரீகத்தினை வளர்ப்பதாகலான்.

இங்ஙனம் வாழ் நாள் எல்லாம தமிழுக்குழைத்துப், பார்ப்பனர்களாலேயே "தமிழ்ப் பித்தர்களெனக் கூறப்படுந்தமிழ் அறிஞர்களை, தமிழ் மக்களை" ஆச்சாரியார் உள்ளிட்ட பொறுப்புள்ள அமைசசர்களும், சட்டசபை உறுப்பி

னர்களும், காங்கரஸ் செய்தித்தாள்களும் "தேசத் துரோகிகள்" என்றும், "ஆரிய நாகரீக விரோதிகள்" என்றும் "வகுப்பு வாதிகள்" என்றும், "குறுகிய மனப்பான்மை கொண்டவர்கள்" என்றும், பெருஞ் சீற்றத்தை உண்டு பண்ணக்கூடிய "அறிவிலிகள்" என்றும், "காங்கரஸ்விரோதிகள்" என்றும், "எந்த நல்ல காரியத்தையும் எதிர்ப்பதே தொழிலாகக்கொண்டவர்கள்" என்றும், இழித்தும், பழித்தும் பேசினார்கள், பேசியும் வருகின்றார்கள், இதுமட்டுமா?

தமிழ் மொழியின் தனிஉரிமைக்கு எதிரான இந்தியை எதிர்த்துக்கிடைத்தற்கரிய தொழிலைத் துறந்தும், அன்பிற்கினிய மனைவி மக்களைப்பிரிந்தும், பல துன்பங்களைமேற்கொண்டும் வெஞ்சிறைவாடும ஆடவர் எவ்வளவு பேர்? தெய்வமெனப்போற்றும தம் கணவனைப்பிரிந்தும், தம் உயிர் என மதிககும அருமைக்குழந்தைகளை நீங்கியும கொடுஞ் சிறைதனியில்வாடும் மாதர்கள் எவ்வளவு பேர்? தமிழுக்காக உடல் பொருள்மட்டுமமல்ல உயிரையும் வழஙகிய இருபெரும் (நடராஜன் தாலமுத்து) மறவர் (வீரா) கள் என்ன? இப்பெரும் வள்ளல் (தியாகி) களையா? காங்கரஸ் அமைசசர்கள், சட்டசபை உறுப்பினர்கள், தேசியச் செய்தித்தாள், தேசத்துரோகிகள் என்று கூறுவது? அறிவிலிகள் என்று அறைவது?

சென்ற 19 திஙகளாகத் தமிழ்த்தாயின் மானங்காக்கத் தமிழ் நாட்டை அடிமை கொள்ளவரும இந்தியை எதிர்க்கச் சிறை சென்றும், உயிர் விட்டும பல துன்பங்களை மேற்கொண்டும், பணத்தை ஏராளமாசசெலவிட்டும், தமிழ் நாடு முழுவதும் சொற்பொழிவுகளாற்றிக்கிளர்சசிகள் செய்தும் வரும் இந்தி எதிர்ப்பு இயக்கத்தை ஆனந்த விகடன் முதலிய தேசிய செய்தித்தாள்களும், ஆசசாரியார் உள்ளிட்ட காங்கரஸ் தலைவர்களும் அர்த்தமற்ற இயககம் என்று அறைவது அக்ரம இயக்கம என்று கூறுவதா? கேவல இயக்கம் என்று செப்புவதா? கூலிகள் இயக்கம் என்று கூறுவதா? காலிகள்

இயக்கம் என்று கனைப்பது? பார்ப்பனர்களிடம், பார்ப்பனச் செய்தித்தாள்களிடம், பார்ப்பனக்காங்கிரசினிடம்,பார்ப்பன அடிமைகளிடமிருந்து உரிமைப் பெறப்போராடுந் தமிழர் இயக்கத்துக்கு இவ்விழிமொழிப் பட்டங்களைத் தவிர வேறென்னகிடைக்கும்.?

ஆங்கிலததில் ஒரு பழமொழியுண்டாம்; ஒரு நாயை அடித்துக்கொல்லவேண்டுமானால் அந்த நாயின் மீதொருபழி யைச்சுமத்து என்று. அதுபோல நல்லதொரு இயக்கத்தைத் தமிழ் நாட்டார் நடத்தும் தமிழர் உரிமைப்போரைக் கட்டுப் பாடாகப்பார்ப்பனர்களும், பார்ப்பனர் கால் வருடிப்பிழைக் கும் பார்ப்பனரல்லாதார் சிலரும் காங்கரஸ் புதரில் மறைந் திருந்து பழிமொழியாம் அம்புகளையும், அடக்கு முறை யாம வாள்களையுங்கொண்டு நம இயக்கத்தை ஒடுக்கப்பார்க் கின்றார்கள். அதற்கு, அன்பும் அறமும வடிவாக வந்தவர் என்று புகழப்படுங் காந்தியாரும் "இந்தி எதிர்ப்பியக்கத் தை ஒடுக்க அடக்குமுறைச் சட்டத்தைக்கையாளா விட்டால் ஆசசாரியார் ஓர் முட்டாள்" என்று கூறித் தம்வலிவான உடன் பாட்டையுங்கொடுத்து விட்டார். மேலும் "இந்தியால் தமிழ்கெடும் என்ற எண்ணத்துடன் ஒருவரும் அதனை எதிர்க்கவில்லை. காங்கரஸ் விரோதிகளே அதனை எதிர்க் கின்றார்கள்" என்றும் காந்திப் பெரியார் தெரிவித்துவிட் டார். அவர் கூற்றால் அவர் உண்மை உரைக்கும் உயர்ந் தோரா? என்னும் எண்ணம் எவர்க்கும் எழாமற்போகாது. ஒன்றுமட்டும் யான் துணிந்து கூறக்கூடும. சென்ற பல் லாண்டுகளாகக் கதரணிந்தும், காந்திப் பெரியாரே கண் கண்ட தெய்வமென்றும, காஙகரஸ் ஒன்றே தமிழ் நாட்டுக்கு தன்னரசுபெற்றுத் தரும தனிப் பெருஞ் சபையென்றும் நமபியிருந்தவர்களில் நானும் ஒருவன். கட்டாய இந்தியை எதிர்க்கும்போதும், எதிர்த்துச சிறையில் இருந்தபோதும் யான் அக்கருத்துடனேயே இருந்தேன்.

இந்தியால் தமிழ் கெடும். என்றபெருங் கவலைகொண்ட

என்முடிவே! என்னை வேலையை விட்டு விலகச்செய்தது; சிறைச்சாலையை அடையச்செய்தது; என்னருமை மனைவி மக்களையும் என்னை விட்டுப்பிரித்து அங்கேசென்று அல்லற் படச்செய்தது. உண்மை இவ்வாறிருக்க "இந்தியால் தமிழ் கெடும் என்ற எண்ணத்துடன் அதனை ஒருவரும் எதிர்க்க வில்லை, காங்கரஸ் பகைவர்களே அதனை எதிர்க்கின்றார்கள்" என்ற காந்திப் பெரியார் பேச்சு என்னளவிலேனும் பொய் மையாதல் கண்டேன். அவரது பேச்சால் தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டிலேனும், "காங்கரஸ் என்பது பார்ப்பனர் களுக்குத்தமிழர்களை அடிமையாக்கும் ஓர் நிலையம்" என்றும் "தன்னரசு என்பது உண்மையில் பார்ப்பனர் அரசே" என் றும் உணர்ந்தேன். நான் மட்டுமல்ல என்போன்ற ஆயிரக் கணக்கான ஏன்? நூறாயிர கணக்கான காங்கரஸ் தமிழர் களுக்கும் இதேஉணர்ச்சி இதேநம்பிக்கை ஏற்படடுவிட்டது. இதனை இப்போதைய என் தமிழ்நாட்டுச சுற்றுப்பிரயாணத் தில் ஐயத்திற்கிடமின்றித் தெளிவாக அறிநதுகொண்டுவிட் டேன். இன்னும் எனக்குங் கதரில் நம்பிக்கை குறைய வில்லை; காந்திப் பெரியாரிடத்தில் மதிப்புக் குறையவில்லை; நாட்டு விடுதலையால் கொண்ட ஆர்வங் குறையவே இல்லை; குறையக்காரணமுமில்லை. ஐவகர்லாலுக்கு நாட்டு விடுதலை வேண்டாமென்ற நாட்டம்வந்து விட்டாலும் தமிழர்களாகிய நாங்கள் நாட்டு விடுதலையை என்றும் ஆர்வமுடன் நாடியே நிற்போம். ஆனல், காங்கிரசைககாட்டிப் பார்ப்பனரல்லா தாரைத் தமிழர்களை ஆள (இப்போது அரைப்பங்கு தன் னரசு எனப்படும் மாகாண ஆட்சியில் பார்ப்பனர் அமர்ந்து ஆள்வதுபோல்) இடங்கொடுக்கமாட்டோம. இப்போலிப் பார்ப்பன காங்கரசைத் தமிழ் நாட்டில் அழிதொழிப்பதே எம்வேலை. இப்பார்ப்பன காங்கரஸ் தான் தமிழை அழித் தொழிக்கக் கட்டாய இந்தியைக்கொணர்ந்திருக்கின்றது. இக்காரணத்தாலும் அதை ஒழித்தேதீரவேண்டும் இந் தியை மட்டும் நாம் ஏன் எதிாக்கின்றோம்? என்று கேட்கப் படுகின்றது. இந்திமொழியின் மேல் நமக்கு எவவகையான வெறுப்புங்கிடையாது, அஃ தழியவேண்டுமென்றோ, ஒழிய

வேண்டுமென்றோ, நாம் எதிர்பார்க்கவுமில்லை; விரும்பவு மில்லை. தமிழ் நாட்டில் முதலிடம் பெறத்தமிழ்த்தாயை ஆட்சிசெய்யத் தமிழ்மொழியை அழிக்கவருவது சீனமானாலும், ஜெர்மனியானாலும், வங்காளியானாலும், வேறெம் மொழியானாலும் அதனைத் தமிழ் நாட்டில் புகவிடாமற்றடுப் பதே தமிழர் கடமை. அம்முறையில்தான் கட்டாய இந்தியை எதிர்க்கின்றோம். இவ்வாறே, ஜெர்மனி முழுவதிலுங்கட் டாயமாகப் பிரன்சு கற்றாக வேண்டுமென்று அந் நாட்டுத் தலைவர் கூறினாலும் (அவரங்ஙனங் கூறக்கனவிலும் நினை யார். அத்தலைவர் உண்மைச் செர்மனியர் ஆகலான்.) அந் நாட்டுமக்கள் பிரன்சை எதிர்க்குங்கடமை யுடையவராவர். அறிவுக்கோ-ஆராய்ச்சிக்கோ-கலை இன்பத்துக்கோ-ஆங்கிலம் கற்பதை எந்தசஜெர்மனியரும் எதிர்க்கமாட்டார். அஃதவர் சொந்த விருப்பமும், உரிமையுமாகும். அது போலவே தமிழ் மக்கள் அறிவுக்கோ ஆராய்ச்சிக்கோ கலையின்பத்துக் கோ இந்தியையோ வேறுபலமொழிகளையோ படிக்க உரிமை பெற்றிருப்பதை நாம் ஏற்றுக்கொள்ளுகின்றோம்; எதிர்க்கவும் மாட்டோம். ஆனால், தமிழ் மக்களுக்கு வேண்டாத நன்மை தாராத இந்தியைத், தமிழ் நாட்டில் உண்மை தமிழரல்லாத ஆரியப்பார்ப்பனத்தலைவர் ஒருவர், தமிழ்மொழியை அழிக் கத் தமிழர்களை தாழ்த்த, இந்தியைக் கட்டாயமாகபபுகுதது வதைத்தமிழ்க்குருதியோடும் ஒரு தமிழன் இருக்கும் வரை யில் உறுதியுடன் இறுதி வரையில் எதிர்த்தே தீருவான் என்பதைப்பார்ப்பன நண்பர்கள் அறிவார்களாக. முன்னால் வந்த ஆங்கிலத்தைத்தமிழர்கள் ஏன் எதிர்க்கவில்லை? என்று கேட்கப்படுகின்றது. ஐம்பது ஆண்டுகட்கு முன் நாம் வெள்ளையா ஆட்சியை எதிர்க்கக்காங்கரசை ஏற்படுததவில்லை அதனால், இன்று எதற்காகக் காங்கரஸ்? என்று கேட்பது எத்துணை முறையற்றதோ அத்துணை முறையற்றது முன் கூறிய கேள்வி ஆங்கிலத்தை என்னென்ன காரணங்கள் கொண்டு எதிர்க்கின்றோமோ அந்த காரணங்களைக்கொண்டே இந்தியையும் எதிர்க்கின்றோம. ஆனால் ஒரு காரணத்திற் காகமட்டும் ஆங்கிலத்தை நாம் வேண்டாமென்றாலும்,

ஜவகர்லாலும் ஆச்சாரியாரும் கூட ஏற்றுப்போற்று
வார்கள். ஆஙகிலத்தில அறிவியல் நூல்கள் பலமலிந்தி
ருப்பதனாலும், அஃது உலகப்பொது மொழியாக விளங்கு
வதனாலும், இவ்விருகாரணங்களாலும், அம்மொழியை
வேண்டியவர்கள் விருப்பமுள்ளவர்கள் ஏற்றுப்போற்று
வதில் தவறொன்று மில்லை: ஆனால், இந்தியில் இவ்விரு
நலஙகளும் சிறிதேனுமுண்டோ? ஆங்கிலம், தன்னரசு
பெறற தமிழ் நாட்டில் கட்டாயப் பாடமாகயிராது; வேண்டி
யவர்கட்கு விருப்பப் பாடமாக இருக்கும். அரைப்பங்கு தன்
னரசு உரிமை உள்ளதென்றுகூறும் இம்மாகாண அரசியலில்
ஆசசாரியார் கட்டாய ஆங்கிலத்தை நீக்க வல்லமை கொண்
டிருப்பாராகில், பார்பபனரல்லாத அமைசசர்கள் முன்
னமே கட்டாய ஆங்கிலததை ஏன் எடுத்திருககக்கூடா
தென்று இநதி எறபாளர் கேட்க உரிமை பெறற வராவர்
ஆங்கிலக் கலவியால் சில நனமைகள் நமக்குக்கிடைத்தன
என்றாலும், பொதுவாகத் தமிழ் கல்வியின் வளர்சசியும்,
முற போக்கும், நாட்டுணர்வும், மொழிப் பற்றும் சமயப்
பற்றும, கலைவளர்சசியும் அடியோடு மாய்ந்து ஒழிந்தது
டன, அமமொழியின் கலப்பால் தமிழின் தூய்மையுங கெட்
டது. ஆங்கிலத்தால் தமிழுக்கும், தமிழர்களுக்கும் நேர்நத
கெடுதல்களை, இந்திமொழி நுழைவைத்தடுக்க தூண்டுதல்
களாயின. ஆஙகிலர் ஆட்சி போம்போது ஆங்கிலமும்
போம. (அமமொழியிலுள்ள அரிய கருத்துக்கள் தமிழ்
மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுத் தமிழருக்கும் பயன்
படவைத்துக்கொள்வோம்) அதன் பின், தமிழ் நாட்டில் தமிழ்
அரியணையேறி ஆட்சி செயயும என்று நாம் எதிர்
பார்த்து மகிழ்நதிருக்க ஆஙகில அரசன் ஓடியவுடன், ஆரிய
அரசனும் இந்தியைக் கொணர்நது அதற்குத் தமிழை அடி
மைப்படுத்த ஆரியராம ஆசசாரியார் முயல்வாராகில நாம்
மானமிழநது, உரிமையிழநது அதற்கு அடிமையாக முடி
யுமா? முடியாது; முடியவே முடியாது. பார்ப்பனரிடததில்
நமககருவறுப்பில்லை; அவர்களைக் குறை கூற நமக்கு விருப்
பமில்லை. தேள் கொட்டினால் அதன் கொடுமையைச் சொல்

வித்தான். தீரவேண்டும். அது போலப்பார்ப்பனர்கள் தமிழுக்கும் தமிழருக்குச்செய்யுங் கொடுமைகளைக் கூறித்தாளுக வேண்டியிருக்கின்றது. இது போலவே, தன்னரசின் பேராலும் காஙகிரஸ்பேராலும் தமிழ் மக்களுக்கு வருங்கெடுதல்களை எடுத்துக் கூறக்கடமை நேர்ந்து விட்டது. யாவர்க்கும் பொதுவாகத்தன்னரசு வேண்டும். காங்கரஸ் வருமளவும், தமிழர் நலனுக்காக இப்போலிப் பார்ப்பனக் காஙகரசைத் தமிழ் நாட்டில் அழித்தொழிக்க வேண்டியது, தமிழர்களின நீங்காக்கடமையாகிவிட்டது. இநதியால் தமிழ் எவவாறு கெடும்? என்று பார்பனரறிவர், அல்லாதாரில் காங்ரஸ் அன்பர்களில் பலரறியவில்லை.

இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?

"தாய் மொழியையும, அதில் உள்ள இலக்கியங்களையும் மதிக்காமல் வேறுமொழிகளுக்கே, தங்களை அடிமையாக்கிக் கொண்டவர்கள் தமிழ் நாட்டில் இருக்கும் அளவு வேறி நாட்டில் இல்லை." (இருவீந்தரநாததாகூர்)

(க) நாட்டு உரிமையும், மொழி உரிமையும் ஒன்று பட்டிருப்பதே உண்மையான உரிமையாகும்.

ஒரு நாடு, தன்னைத்தானே ஆண்டு கொள்ளும் உரிமை உடையதானல், அந்நாட்டுத்தாய் மொழியே அந்த நாட்டின் அரசியல் மொழியாக விளங்கும். அமைசசர் அவை (மநதிரிசபை) சட்டசபை, முறை மன்றம் (நியாயஸ்தலம்) நாட்டு நிலயம் (ஸ்தலஸ்தாபனம) அரசியல் தொடர்பான நிலயங்கள், செயல்கள் அனைவற்றிலும் வழஙகப்படும் மொழியே அரசியல் மொழி எனப்படும். இவ்வுண்மை தன்னரசுடன் விளங்கும் பிரிட்டன், பிரஞ்சு, ஜெர்மனி, இத்தாலி,ஜப்பான்,துருக்கி முதலிய நாடுகளில் அவ்வவற்றின்

தாய்மொழிகளே அரசியல் மொழிகளாக விளங்குவதைக் கொண்டு அறியப்படுகின்றது. இந்திய நாடு தன்னரசின்றி ஆங்கிலவருக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறது என்றால், இந்திய மொழிகளும், அவ் ஆங்கிலர் மொழியாம் ஆங்கிலத்துக்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றது. ஆங்கிலர், இந்தியரை ஆள்கின்றாரென்றால், ஆங்கிலமொழியும இந்தியரை ஆள்கின்றது. காரைக்கால் நாட்டைப பிரஞ்சியர் ஆள்கின்றாரென்றால், பிரஞ்சு மொழியும் அநத நாட்டை ஆள்கின்றது. அந்நாட்டில் உள்ள தமிழ் மக்கள் பிரஞ்சியருக்கு அடிமைப்பட்டவர்கள். ஆகவே அத்தமிழர்களின் தமிழும், பிரஞ்சுக்கு அடிமையாகிக் கிடக்கின்றது. இந்தியர் தன்னரசு பெறறு வாழுங்கால் இந்திய மொழிகளும் தன்னரசு பெற்று அரசியல மொழிகளாக விளங்கும. இவற்றால நாட்டுரிமை உள்ள இடஙகளில் மொழியுரிமையும, மொழியுரிமை உள்ள இடஙகளில நாட்டுரிமையும பிரிவின்றி ஒத்து நிற்கும என்பதும் இவ்விரண்டு உரிமைகளும ஒத்து நின்று நடப்பதே உண்மை உரிமை, (சுதந்திரம) ஆகும என்பதும விளக்கமாகின்ற தன்றே?

(உ) தாய்மொழி முனனேற்றமே தாய் நாட்டு மக்களின் முன்னேற்றம்.

தன்னரசுள்ள நாட்டில், தாய்மொழியே அரசியல் மொழியாக அமர்நது ஆட்சி செய்வதால் அநநாட்டு மக்கள் அனைவரும் தமதாய்மொழியை நன்குப் பயிலவும, சிறந்த அறிவைபபெறவும், அதனுமேலேய உயர்நிலைகளை (பதவி) அடையவும, பெருஞ்செல்வத்துடன் நாகரிகமாய் இன்புற்று வாழவும் வல்லவர்களாக வாழ்கின்றனர். இதறகு எடுத்துக் காட்டாக ஆங்கிலர், ஜெர்மனியர், ஜப்பானியர், பிரஞ்சியர். இததாலியர் முதலியோர் தம நாடுகளில் அரசியல், வாணிபம் முதலிய வாழ்க்கைத் துறைகளில் யாவற்றிலும தத்தம் தாய் மொழிகளையே முன் வைத்து முன்னேறறமுடன வாழ்கின்றனர். ஆங்கில நாட்டு மக்கள் குஜராத்

தியைக் கட்டாயமாகக் கற்று அதன் வழியாகத்தான் நம் நாட்டு அரசியலில் பங்கு பெறவேண்டும என்றிருந்தால ஆங்கிலர் இத்துணை உயர் நிலையில் இருக்க முடியுமா? நூற்றுக்குத தொண்ணூற்றொன்பது பேர் எழுதப்படிக்கத தெரிந்தவர்களாக இருககக் கூடுமா? காலஞ்சென்ற இராம்சேமக்டனால்ட் என்ற ஆங்கில நாட்டுத் தலைமை அமைசசர் தம் இளமைக் காலததில் மிகவும வறுமையுடையவராய், மீன் பிடித்து விற்றும், வயிறு பிழைத்தவர். அவர் நுண்ணறிவினர் ஆதலாலும, அவரது தாய் மொழியாகிய ஆங்கிலமே அவர் நாட்டு அரசியல் மொழி ஆகலாலும் அவர் தம மொழியை விரைவில் நன்கு கற்றுப் படிப்படியாக உயர் நிலையில் உயர்ந்தார். தம் நாட்டில உயர்ந்தோர் இறுதியாக அடையவேண்டிய மேல் நிலையாம் தலைமை அமைசசர் ஆணையையும பெற்றார். இன்னும், இவ்வாறே ஜர்மனி நாட்டுததனி ஆணையாக (சர்வாதிகாரி) விளங்கும ஹிட்லரும தன் இளமைக காலத்தில் வயிற்றுக்கில்லாமல் வாடிப் படமெழுதி விற்றுப் பிழைத்தவர். பின்னர், தம நாட்டுப் படையில் எளிய மறவராகத்தொண்டு புரிந்தவர். தம் நாட்டில் தம் தாய் மொழியாகிய ஜர்மெனியே அரசியல் மொழியாக விளங்குதலின் கூரிய அறிவினராகிய அவா தம் தாய் மொழியில் பலநூல்களையும் கற்று விரைவாக முன்னேற்றமுற்று இப்பொழுது உலகை நடுங்க வைக்கும வல்லவராக வாழ்கின்றார்.

இவருக்கு ஆங்கிலம் தெரியாது. ஜெர்மெனியில் ஆங்கிலம அரசியல மொழியாக இருந்தால இவர் தன் நாட்டுத் தனிப் பெரும ஆணையராய அமைந்திருத்தல் கூடுமோ? இன்னும் இத்தாலிய நாட்டுததனி ஆணையாகிய முசோலினியை நோக்குங்கள். அவர் தம் இளமைப் பருவத்தே உணவில்லாமல் ஐயம் ஏற்றும், உறைவிடம் இல்லாமல் ஆற்றுப்பாலத்து வளைவின மடிப்பிடங்களில் இராக்காலங்களில் உறங்கியும் துன்புற்று வாழ்ந்தவர். இவரும் நல்ல அறிவு வாய்ந்தவராகலானும், தம் நாட்டில் தம் தாய்

மொழியே அரசியல் மொழியாக இருத்தலானும், அம்மொழியை அவர் விரைவில் நன்றாகக்கற்று போர்மறவர் பணியிலிருந்து 'படிப்படியாக உயர்நிலை அடைந்து, இன்று இத்தாலி நாட்டுத் தலைவராக விளங்குகின்றார். இன்னும், சீன நாட்டின் சிறப்புற்ற தலைவரான சியாங்கைசேக் என்பார் ஆங்கிலம் அறியாதவர். அந்தநாட்டு அரசியல் மொழியே தம்தாயமொழியாகப்பெற்றவர் ஆதலால் ஆஙகிலம் அறியாத அவர் தம நாட்டுத்தலைவராக வர இயன்றது. இவ்வாறு மேற்காட்டிய பிரிட்டன் ஜர்மனி, இததாலி,சீனம முதலிய உரிமையுள்ள நாடுகளில் தாயமொழிகளே அரசியல் மொழிகளாக முன்னேற்ற முற்றுவிளஙகுதலின் அந் நாடுகளில, மிகவும் வறிஞராய உள்ளோரும மேனிலைக்குவர இயல்கின்றது. இங்ஙனம், எலலாத்துறைகளிலும மக்கள் மேன்மை பெறததாய்மொழிகளே பெருநதுணையாக இருததலின, அந நாட்டவர்கள எல்லாரும தம தாயமொழிகளை ஆர்வமுடன் போற்றிககறறு முன்னேற்றம அடைந்து விளஙகுகின்றனர் இவற்றால உரிமை பெறற நாடுகளில் உளளார் ஒருவர் அரசியலில் நன்னிலை அடையத் தம தாய மொழியை நன்கு பயில்கின்றார். அதன் காரணமாக அவர் தம் நாட்டு இலக்கியங்களையும, சமயநூல்களையும, ஒழுக்க நூல்களையும கறக நேரிடுகின்றது. அவர் கருதியவாறு அவருக்கு அரசியல் நிலைமைகள் கிடைக்கா விட்டாலும, அவர் கற்ற இலக்கிய சமய, ஒழுக்க நூல்கள், அவர் வாழ்கையில் - ஈடுபடுந் தொழில்களில் - பெரிதும பயன் தநது அவரைச் சிறப்பிக்கின்றது. இவற்றால், தாய் மொழி முனனேற்றமே தாய் நாட்டு மக்களின் முன்னேற்றமாம என்பது வெளிப்படையாக விளங்குகின்றதன்றோ?

(ங) தாய் மொழியில் கலைகளைக் கற்றலே மக்களை எளிதில் உயர்த்தும் சீரியவழி

நம் இந்திய நாட்டில், ஆங்கிலம அரசியல் மொழியாக இருத்தலினாலும், அதனைக் கறறவர்களே அரசியலில்

மேனிலைக்கு வரக்கூடும் என்ற சட்டம் இருத்தலினாலும் அம்மொழியைக் கற்றுப் பட்டம் பெறப்பெரும பொருட் செலவும் நீண்ட காலமும, பெருந்துன்பமும் நிறைநது இருத்தலினாலும், அதனைக் கறக நம நாட்டு ஏழை மககளுக்குப் பொருளுமிலலை தன்னமபிக்கையு மில்லை. தாய் மொழிக கல்வி வயிற்றை நிரபப ஏதொரு நன்மையையும தாராமையால் நம மக்கள் அதனைக் கறக விருப்பம் கொள் ளாது, அறிவிலிகளாய், தற்குறிகளாய, விலஙகிலும் கடை யராய், மிகமிக வறிஞராய வாழ்ந்து வருகின்றாரகள். பிற மொழி அரசியல் மொழியாக இருககினற ஒரே காரணத் தால் கோடிக்கணக்கான இந்தியர்கள், தமிழர்கள் கண் படைத் தும குருடர்களாய, அறிவிருந்தும் விலங்குகளாய வாழ்கின றனர். நம தாய் மொழிகளே அரசியல் மொழிகளாக இருக்குமானால நாம் அனைவரும் கல்வியில் வலலவர்களாய் அரசியல் உரிமை பெற்று உலகின் முன் உயர்நத மதிப புடன விளஙகலாமன்றோ? அதனாலேயே காந்திப் பெரியாரும "ஐமபது ஆண்டுகளாக ஆஙகிலக் கல்வியை வருநதிக கற்பதைவிட ஐந்து ஆண்டுகள் தாய் மொழிக் கல்வி கற்று இருப்போமாகில் நாம் என்றோ சுயராஜ்யம் பெற்றிருக்கலாம," என்று கூறி இருக்கின்றார். இயற்கை யில, நல்லறிவு படைத்த பல்லாயிரககணக்கான இந்தியர்கள் கூட ஆங்கிலம கற்கப்பெரும பொருள் இல்லாமையினாலும், தாய மொழிப் புலமையால் அரசியல் நிலைகள் ஏதொன் றும் கிடைககாமையாலும் ஆஙகிலக் கல்வியையும் தாய மொழிக் கல்வியையும் ஒதுக்கி வருகிறார்கள். இதனால் அவாகள் இலக்கியச சுவைகளை அறிந்து மகிழவும், ஒழுக்க நூல்களைக் கற்றுப் பிறர் நன்கு மதிப்புக்கேற்றவாறு நடந்து பீடுபெறவும், கைத்தொழில்கள் செய்து செல்வமபெறவும இயலாத ஏழைகளாய்த் துன்புற்று வாழ்கின்றார்கள். ஈதறி யாத சிலர், உரிமை பெற்ற நாடுகள் மேன்மையுற்றிருப்பது தாய் மொழிக் கல்வியால் அல்ல, கைத்தொழில்களால்; அறி வியல் நூல்களால; பொறிகளின் (யநதிரசாதனஙகள்) துணை யால்; என்று கூறுகின்றனர். ஆம் அஃது ஒரு வகையில்

உண்மையே. ஆனால், அக்கைத்தொழில் நூல்களும், அறிவியல் நூல்களும, பொறிகளின் துணை நலங்களும் தாய் மொழி வழியாகவே அந்நாட்டு மக்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன என்பதை அவரறிவாராக. அதனாற் அந்நாட்டு ஏழைகளும் மிக விரைவில் வருத்தமின்றிக் கால நீட்டிப்பின்றி பெருஞ் செலவின்றி அவற்றை எளிதில் கற்றுப் பெருநன்மையடைகின்றனர். நம் இந்திய நாட்டிலோ எனின் மேற்கூறிய நூல்கள் தொழில்கள் எல்லாம் தாய் மொழியில் கற்பிக்கபடாமல் ஆங்கிலத்தின் வழியாகக் கற்பிக்கப்படுதலின் செல்வர்களே யன்றி ஏழை எளிய மக்களும் பெரும் பொருட் செலவு செய்து, நீண்ட காலம், மிகவும வருந்திப் பயிலவேண்டியிருததலின் அவைகளைக் கற்காமல் விடுகின்றார்கள். அந் நூல்கள் தாய் மொழியில் இருக்குமானால், செலவின்றிக காலக்கேடின்றி, வருத்தமின்றி ஏழை எளியவரும் அவைகளைக் கற்று அறிவினாலும், செல்வத்தினாலும நாகரீகத்தினாலும மேன்மையடையலாமன்றோ? எடுத்துக் காட்டாகக் கட்டிடத் தொழில் (இன்ஜினியரிங) நூலகளை ஓர் அறிஞா நல்ல எளிய தமிழில் மொழிபெயாத்துவிட்டால் அதனைக் கறக விரும்பும் ஆயிரக்கணககான தமிழ் மக்கள் பெருஞ் செலவின்றிக் காலக்கேடின்றி, வருத்தமின்றி எளிதாகக் கற்று நலமடையலாமன்றோ? மற்றும சட்ட நூல்களை ஓரறிஞர் தமிழில் மொழிபெயர்த்துவிட்டாரானல் ஓரளவு தமிழ் அறிவுடைய ஆயிரக்கணக்கான தமிழர்கள் தம வீட்டிலிருந்துகொண்டே ஆயிரக்கணக்கான பொருட் செலவின்றி அந்நூல்களைக் கற்று வழககறிஞர் (வக்கீல்) பட்டமும் பெற்றுப் பெருநலமடையலாமே! ஆகவே ஒரு நாட்டு மக்கள் நலமுடன் வாழவேண்டுமானால் கைதொழிற் கலைகள், அறவியல் கலைகள், பொறிகளின் ஆட்சிகள் ஆகிய

வற்றைத் தாய்மொழி வழியாகக் கற்றலே மக்களை எளிதில் உயர்த்தும் சீரியவழி என்ற கூற்று உண்மையாதல் காண்க.

கட்டாய இந்தியால் பயன் என்ன?

அறிவியல், வாணிகம, கைத்தொழில், நூல்களை இத்தாலியர், ஜர்மனியர், ஆங்கிலேயர் முதலியோர் தம் தாய் மொழி வழியாக அல்லாமல் பிறமொழி வழியாகக் கறபதென்று சட்டம் இருந்தால் அநநாட்டு மக்கள் இத்துணை முன்னேற்றமுறறு வளமுடன் வாழக்கூடுமா? இதனை உணர்ந்தே நம நாட்டு மக்களின் முன்னேறறத்தில் ஆர்வங்கொண்ட அறிஞர் அனைவரும் அறிவியல் உள்ளிட்ட கலைகள் அனைத்தையும் ஆங்கிலத்தின் வழியின்றித் தாய் மொழி வழியாகவே கற்பிக்கவேண்டுமென்று வற்புறுத்தி வருகின்றாகள. அரசியலாரும் அககருத்தை ஏற்றுக்கொண்டு அதற்கான முயற்சியிலுஞ் சிறிது ஈடுபட்டிருக்கின்றனர். சில பளளிக்கூடங்களில், அம்முறைபற்றித் தாயமொழியிலேயே எல்லாக் கல்விகளையும கற்பித்துப்பார்த்துப் பார்த்ததில் பெருப் பயன விளைநதிருககின்றது. ஆகவே, பல கலையும கற்றுவா ஆங்கிலமே வேண்டாதிருக்க பலகலை நூல் களில்லா இந்தியை கட்டாயமாக சற்பதால் மாணவர் அடையும பயன்தான் என்ன? அறிவு நூல் நிறையப்பெற்ற கட்டாய ஆஙகிலத்தின் வழியாக ஒரு நாட்டவர் முன்னேற்ற முற இயலாதென்றால், கூடாதென்றால் இலக்கியமும், அறிவ நூல்களுமில்லாத கட்டாய இந்தி வழியாகத் தான் தமிழ் நாட்டவர் முன்னேறக்கூடுமென்ற பேதைமிக கருததைச் சிறிது அறிவுள்ளவர்களும ஒப்பமாட்டார்கள். ஒரு நாட்டார் பிறநாட்டுமொழியை துணையாகக்கொணடு முன்னேற்ற மடைந்ததாக வரலாறு (சரித்திரம் கூறவில்லை. கூறவும் முடியாது; அஃது இயற்கையுமல்ல) இன்றுவரையில் நாகரீகத்தில முதிர்நது முன்னேற்றமுற்ற நாடுகள் எல்லாம் தத்தம் தாய மொழிகள் துணைகொண்டே முன்னேறியுள்ளன. இதுதான் இயற்கை இஃதுணர்ந்தே, "அவரவர்

தாய் மொழியே அவரவர் வளர்ச்சிக்கு ஆதாரமாய் அமைதல்வேண்டும்'' என்று பேரறிஞர் தாகூர் அவர்களும் மொழிந்திருக்கிறார். இதை உற்று நோக்கும் போது நம் தமிழர் வளர்ச்சிக்குத் தமிழே யல்லாமல் இந்தி ஆதாரமாய் அமைதல் இயலாது, இயலாது என்பது நன்கு விளங்குகின்றதன்றோ? எனவே, "இந்தி வழியாகத்தான் இந்தியர் முன்னேற்றமடையக்கூடும்'' என்ற ஆராய்ச்சியறிவில்லார் கூற்றை அறிஞர் உலகங்கண்டு நகையாடுகின்றது. பின்னர், கட்டாய இந்தி ஏன் என்றாருக்கு, "அஃது இந்தியாவை ஒன்றுபடுத்தும், தென்னாட்டவர்க்கு வடநாட்டில் வேலை கிடைக்கச் செய்யும்; வடநாட்டில் வாணிகம் செய்யலாம்'' என்றெல்லாம் தலைமை அமைச்சர் திரு இராஜகோபாலாச்சாரியாரவர்கள் கூறி வருகின்றார்கள். இப்போலிக் கூற்றுகளை எல்லாம் தமிழ்ப் பேராசிரியர் திரு சோமசுந்தர பாரதியாரவர்கள் தம் அறிவாம் வாளினால் துண்டு துண்டாக வீசி எறிந்தார்கள். அதற்கு இன்றுவரை திருவாளர், ஆச்சாரியார் அவர்கள் விடையிறுக்க வழியில்லாது கலங்கி நிற்கின்றார்கள். ஆதலின் அப்போலிக்கூற்றுகட்கு நாம் விடை தருவது வீண் வேலையாகும். ஆனால், ஒன்றுக்குமட்டும் ஈண்டு விடை கூற விரும்புகிறோம்.

நடு மன்னவையும் இந்தியும்.

அஃதாவது, இந்தியாவின் "நடு மன்னவை (சமஷ்டி சட்ட சபை)யில் பல மாகாணத்தவரும் ஒன்றுகூடிப் பேச ஒரு பொது மொழி வேண்டும். அம் மொழி இந்தி ஆதலின், அதனைக் கட்டாயமாகப் படிக்கவேண்டும்'' என்பது. இந்தியக் கூட்டரசியலில் சேரவேண்டுமானால் அங்கு இந்தியில்தான் பேசவேண்டும், தமிழில் பேசக்கூடாதென்றால் தமிழுக்கு இழிவைத்தரும் அவ்வரசில் மானமுள்ள தமிழ் நாடு சேராது. தமிழில் பேசலாகாதென்று கட்டளையிட அந்த அவைக்கு உரிமையேது? அவ்வுரிமையை அதற்கு ஆண்மையுள்ள நாடுகள் ஒன்றாவது அளிக்கா. நாடுகள் கழ

கத்தில் (சர்வதேச சங்கம்) பல நாடுகளைச சார்ந்தவர்களும் தம் தாய் மொழியின்பாலுள்ள ஆர்வத்தால், தம் மொழி களுக்குள்ள உரிமையால், தம் தாய் மொழிகளிலேயே பேசு கின்றனர். அண்மையில் நிகழ்ந்த அபிசீனியப் போரின் போது நாடுகள் கழகத்தில், ஆங்கிலத்தில் நாவன்மை படைத்த அபிசீனிய மன்னர் அம்மொழியில் பேசாது தம் தாய மொழியாகிய அம்காரி மொழியில் பேசினர். பிரஞ்சு, இத்தாலி நாட்டு விடைகளும் (பிரதிநிதிகளும்) தத்தம் மொழிகளிலேயே அக்கழகத்தில் பேசினர். மொழிபெயர்ப் பாளர் சிலர் அவற்றை மொழி பெயர்த்து அவையோர்க்குக் கூறினர். இதனால், காலக்கேடு சிறிது நேர்ந்தாலும், மக்க ளுக்கு உயிர் போன்ற உரிமை சிறப்பிக்கப்படுதல் பாராட் டற்பாலதே. இதுபோலவே நடு மன்னவையிலும் ஏன் நடத்தல்கூடாது? காங்கிரசில் உரிமை உணர்வு பெறுவோரும் என்னும் போலித் தமிழர் சிலர் திருநெல்வேலிச் சீர்மையில் (ஜில்லா) அண்மையில் (ஜில்லா) தமிழர் ஒருவருக்கு இந்தி மொழியில் வரவேற்புத்தாள் வழங்கினார்களாம். இவர்கள் தானு நாட்டு விடுதலையை வாங்கிவரும வீரர்கள்? உரிமை யுணர்ந்த உயர்ந்தோர்கள்? மானமுள்ள தமிழ் மக்கள்? அடிமை வாழ்வில் ஊறிப்போன இவர்களா? தமிழர் உரிமையை வாங்கப் போகிறார்கள்? வெள்ளையர்களை விரட் டப்போகின்றார்கள்? ஆங்கிலத்துக்கு அடிமையாயிருப் பதைவிட எம் நாட்டு இந்துக்கு அடிமையாக இருக்க அவா வுறுகின்றேன்'' என்று அடிமைத் தமிழர் சிலர் ஆர்வமுடன உரைக்கின்றார். ஏ! அடிமைத் தமிழா? நீ ஒவ்வோர்கால் ஒவ்வோர் காரணங்கொண்டு ஒவ்வோர் நாட்டுக்கு உன்னையும் உன் தமிழையும் அடிமையாக்கிக்கொண்டேபோனால் என்று நீயும் உன் தமிழும் அடிமை நீங்கி உரிமைபெற்று ஆண்மை யுடன் வாழப்போகின்றாய்? ஏ! மானமற்ற மகனே! நீ வேண்டுமானால் அடிமையாயக் கிடந்து வயிறு பிழை. மான மிழநது வாழ்! உன்னைப் பெற்ற தமிழ்த் தாய் உனனிலே கண்டு கண்ணீர் வடிக்கட்டும். பாண்டியன் வழிவந்த நாங் கள் (உண்மைத் தமிர்கள்) எக்காரணங்கொண்டும், எக்காலத்

திலும் யாருக்கும் அடிமைப்படமாட்டோம். எங்கள் அருமைத் தமிழையும் யாருக்கும் எக்காரணங்கொண்டும் அடிமையாக்கமாட்டோம். ஆங்கில ஆட்சியோடு ஆங்கில மொழியையும் (அம்மொழியிலுள்ள அரிய கருத்துக்களை கலைகளைத் தமிழில்கொண்டு) ஒட்டி அரியாணையில், எம்மருமைத் தமிழை ஏற்றி ஆட்சி செய்ய அமர்த்த இருக்கையில் நீ வடநாட்டாரைகொணர்ந்து, அவர் மொழியாம இந்தியை கொணர்ந்து தமிழை வீழ்த்தி இந்தியை அரியாணை ஏற்ற முயல்கின்றாய். ஏ! அடிமையே! உன் எண்ணததில் தமிழர் மண்ணைப்போடுவர். நடு மன்னவையைக் காட்டித் தமிழை எப்படியாகிலும இந்திக்கு அடிமையாக்க முயன்றாய், தோற்றாய், தமிழ் நாட்டின் விடைகளாய்அவ்வவையில் இருவர், மூவர், அமர்வதறகாக மூனறுகோடி தமிழர்களுமா கட்டாயமாக இந்தியைக் கற்கவேண்டும்? அவ்வவையில் நம்மவர் மூவரும் தமிழிலேயே பேசவேண்டும்! மொழிபெயர்ப்பாளரதனை மொழி பெயர்த்துக்கூறட்டும். பொதுமையை (சமரசம) முன்னிட்டு வேண்டுமானல் "மூன்று திங்களுக்குள் எளிதாகக் கற்றுக்கொள்ளலாம் என்று" நீ கூறும இநதியை அவர்கள் மூன்று திங்களில் கற்றுக் கொள்ளட்டுமே! ஏன் நீ கூறுமாறு இருநூறு சொற்களே போதுமே! அதில் பேசட்டுமே! ஆனல், அசசவையில் இந்தியில்தான் பேசவேண்டுமென்றால, உணர்சசியுள்ள தமிழன அச்சவையைத் திரும்பியும் பார்க்கமாட்டான். இங்ஙனமிருக்க மூனறு பேருககாக ஏன் முக்கோடித் தமிழர்களை ஏன் துன்புறுத்துகின்றாய்? அம் மூவர் யாவர்? என்று நாம இப்போதே தெரிநதுகொள்ள முடியாது. ஆதலின் முக்கோடிக் தமிழர்களும கட்டாயமாக இநதியை இளமைக் காலத்திலேயே கற்றிருந்தால் பின்னுள், அஃது அவர்களுககு நடு மன்னவையில் பயன்படுமல்லவா? என்று, கேட்கின்றாய். அங்ஙனமானல் தமிழ் நாட்டிலேயன்றி, வேறு நாடுகட்குச் சென்றாலும் நடு மன்னவைக்குசசெல்லும மூன்று பேருக்குமட்டுமல்ல ஆயிரக்கணக்கானவர்கட்குப் பிழைப்பைத் தரும் வழக்கறிஞர் கல்வி, ஊர்தி (கார்) ஓட்டுங்

கல்வி, கட்டிடக்கல்வி, ஆசிரியர்கல்வி, மின்சாரக்கல்வி வாணிபக்கல்வி, தச்சுக்கல்வி, வண்டியோட்டுங்கல்வி, இரும்பு செய் கல்வி முதலிய பல கல்விகளையும் ஏன் கட்டாயக் கல்வி யாக்காதுவிட்டாய் ? எப்படியாவது, பொருத்தமில்லா ஒன்றை அறிவிலிகளிடங் கூறித் தமிழை இந்திக்கு அடிமை யாக்கத்துடிதுடிக்கும் போலித் தமிழனே ! உன் கெட்ட எண்ணம் தமிழர்க்குத் தெரிந்துவிட்டது. ஏமாறறிப். பொய் சொல்லுவோருக்கு என்றாலும் கேடு காத்திருக் கின்றது. இனி உன் சொல் அறிஞர் அவையில் ஏறாது! ஏறாது.

கட்டாய இந்தியால் சிறிதேனும் நன்மை உண்டோ.

உரிமை இன்னதென உணர்ந்த தமிழர் இருவர் இந்தி தெரிந்திருந்தாலும் அம்மொழிகொண்டு நாம் அளவளாவக் கூடாது. அம்மொழியில், கடிதமெழுதக்கூடாது. தமிழ் மொழியில் வெளியாகும் செய்தித்தாள்களையன்றி, இந்தித் தாளைப் படிக்கலாகாது, இவ்வாறே, நம் வாழ்வுக்கான செயல்கள் அனைத்திலும் தமிழ்நாட்டில் தமிழர்கள் தமிழி லேயே பேசிச செயல் புரிதல் வேண்டும். ஆகவே தமிழர் கள் கட்டாய இந்தியைக் கற்றுத் தேர்ந்திருந்தாலும் பழக் கத்திலில்லாமையால் சில திங்களில் அவர்கள் அதனை மறசக நேரிடும். நினைவிலிருந்தாலும் பயனில்லை. எனவே, நூறு ஆயிரததில் (லட்சம்) ஒருவர் வடநாட்டில் வாணிபம் நடத் தப்பதினாயிரத்தில் ஒருவர் சில நாளில் வடநாடு சென்று திரும்ப, மூன்று பேர் நடுமன்னவையில் அமர, இருநூறு சொற்கள் இந்தியில் கற்றுக்கொள்ள மூன்று கோடித் தமிழர் கள்மீது அடக்கு முறையைக்கொண்டு ஆடவர் பெண்டிர் குழந்தைகளாக ஆயிரத்து நூற்றுவரைக் கொடுஞ்சிறையி லிட்டும் கட்டாயமாக இந்தியைத் திணிப்பதனால் யாது

பயன்? இங்கேவா, அங்கேபோ, தண்ணீர் குடி, சோறு வேண்டாமா? என்று இந்தி யைத்தவிர மூன்றாண்டு இந்திப் படிப்பால் மாணவர் பெறும் பயனென்ன? அதில் இருந்து, இலக்கியங்கள் கற்றுலுமபயனுண்டு. அதில் இலக்கியங் கூட இல்லையே! பேசசுக்காக மாணவர்கள் மூன்றாண்டு தம் மறிவைப் பயனில்லாவழியாகிய இநதியில் செலவிடுவது வீண் செயலன்றோ?

வட நாட்டுக்குச் செல்ல விரும்புவோரோ - அங்கு வாணிபம் நடத்துவோரோ வேறு தேவைகள் உடையவர் களோ இந்தியையோ - பர்மியையோ - சிங்களத்தையோ, வேறு பல மொழிகளையோ வேண்டுமானல் விருப்பப்பாட மாகக் கற பதில் யாருக்கும் தடைகிடையாது ஒரு சிலர்க் காக வேற்று நாட்டு மொழியை ஒரு நாட்டினர் அனைவரும் கற்க வேண்டு மென்று கட்டாய சட்டஞ் செயயுங் கொடு மையை இப்பார்ப்பனர் ஆட்சியில் அன்றி வேறெங்குக்காண முடியும்? இந்தி வழங்கும் மாகாணஙகளில் நூறு தமிழர் வாணிபம நடத்துவதற்காக மூன்று கோடி தமிழர்களும் கட்டாயமாக இந்தி கற்க வேண்டும் என்றால், பர்மா, மலாய் இலங்கை, பிஜி, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் தமிழர்கள் பதினாயிரக் கணககில் குடியேறி ஆயிரக்கணககில் வாணிபம் நடத்துகின்றார்களாதலின் தமிழரனைவரும் கட்டாயமாகப் பர்மா, மலாய்,சிஙகளம், பிஜீ, காப்பிரி மொழிகளைக் கற்க வேண்டு மென்று ஏன் சட்டஞ் செய்ய லாகாது என்று திருவாளர் ஆசசாரியார் அவர்களைககேட் கின்றோம். அவைகளைக் கட்டாயபாடமாக்க வேண்டு மென்பது நம்மெண்ணமல்ல; கட்டாய இந்திக்காகப்போலிக் காரணங்கள் கூறும ஆச்சாரியாரின் அறிவில்லாக் கூற்றுக் களை மறுப்பதற்காக இதனைச் சொன்னோம. இவற்றால், ஒரு சிலர்க்காக ஒரு நாட்டாரனைவரும் இந்தியைக் கட்டாய மாகக் கற்பதால் எதொரு நன்மையும் உண்டாகாதென்ற அறிஞர் கூற்று உண்மையாதல்காண்க. இவை நிற்க.

ஆங்கிலத்தால் தமிழ் கெடுங்கோலம்.

அரசியலார் எம்மொழிக்கு ஏற்றந்தருகிறார்களோ அம்மொழியே மதிப்பும், வளர்ச்சியும் பெறும். ஏனைய மொழிகள் வளர்ச்சியும் மதிப்பும் பெறா. ஆங்கிலம் அரசியல் மொழியாக இருப்பதனால் அம்மொழி உயர்விடத்து மொழியாக விளங்குகின்றது. அதற்குள்ள மதிப்பை அளவிட முடியாது. அம்மொழியில் பேசுவதே பெருமைக்குரியதென்று, அம்மொழிச் சொற்களைத் தமிழில் கலந்து பேசுவதே மதிப்பைத் தருமென்றும் நம்மவர்களில் பெரும்பாலோர் (ஆங்கிலமறிந்தோர்) கருதிக்கருதியவாறே செய்து வருவது நாடறியும். வேண்டுமாயின் இதோ எடுத்துக்காட்டு. "பிரதர் மார்னிங் எக்மோரில் (எழும்பூர்) செவன் தேர்ட்டிக்கு ட்ரெயின் ஏறி டென் பிப்டி வைவுககு கஞ்சீவரத்தை ரீச்பண்ணேன். எங்க பாதர்லா ஹவுசுக்குப்போனேன். என் ஓய்ப் பெர்கனட் டென்த் மந்த் சார் இது. அந்த ஊர் டாக்டர் எனக்கு பெஸ்ட் பிரண்ட். அவருக்கு சியார்ஸ் செய்யப் போனேன். அவர் காங்கரஸ் டெலிகேட்டாம. தேர்போர் ஹி வென்ட் டேஞ்சர் எஸ்டர்டே. பாருங்கோ சார். காரியம் ஜெயமாக வில்லை. ஏன் சார் நீங்கே எங்கே இருந்து வாரீங்கோ? பஜாரிலிருந்தா, விஜிடபிள்ஸ் இந்த ஊரில் டெட் சீப் சார பிரிஞ்சால்ஸ் சோஸ்வீட், இநத ஊர் வாட்டர் குட் டேஸ்ட்; ரென்ட் ரொம்ப ஜாஸ்தி. எங்க பாய போர்த்பாரம் வாசிக்கிறான். மேதமாடிகஸிலே ரொம்ப வீக். உஙக ஸ்கூல் மேதமேடிக் எல்டி எப்படி? எக்ஸ்பீரியன்ஸ் உள்ளவரா? அவன் மதராஸிலே இததனை கஷ்டம். உங்கள் சிட்டிககு பேம்லியை கொண்டு வரவேணும் என்பது என் ஆப்ஜக்ட் ஈஸ்வரன வில் எப்படியோ? எக்ஸூஸ்பண்ணிகோ - நான் சீக்கிரம்போகணும், தேங்க்யூ," இவை தமிழா? ஆங்கிலமா? தன்னரசுப் பிததர்களே ஆஙகிலததைத் தமிழில் கலந்து இவவாறு பேசுகின்றார்கள் என்றால் மற்றவர்களைப் பற்றிக் கூறவும் வேண்டுமா? தாய், தந்தை, மகன், மனைவி முதலிய

உறவுப் பெயர்களையும், தண்ணீர், சாப்பாடு, சிற்றுண்டி முதலிய உணவுப் பெயர்களையும் ஆண்டு, திங்கள், நாள், மணி, நாழிகை முதலிய காலப்பெயர்களையும் மற்றும் பால் முதலிய பண்டங்களின் பெயர்களையும் தமிழில் பேசக்கூசுகின்றார்கள். தமிழர்கள் மதிப்பென்று எண்ணி ஏன்? ஆங்கிலம் அரசமொழி; தமிழ் அடிமைமொழி; இதை யறியமாட்டாத பலரும், அறிந்தோர் சிலரும் தம் அறியாமைக்கு வருந்தாமல், தம் சோம்பலுக்கும், மொழிப்பற்றில்லாமைக்கும் வெட்கப்படாமல் தாம் ஆங்கிலத்தைத் தமிழில் கலந்து பேசுவதற்குப் பேரறிஞர்போல் இங்கிலீஷைப் பாருங்கோசார்; அதில் எவ்வளவு லாட்டின் கிரீக் வேட்ஸ்கள் இருக்கு; ஒருலாங்வேஜில் மத்த பாஷைப் பதங்கள் சேர்ந்தால் தான் அந்த பாஷை அபிவிர்த்தியாகும். தமிழிலிருந்து கூட இங்கிலீஷ் கட்டுமிராம், என்ற வேட்ஸ்களை எடுத்துக்கொள்ளலையா? ஆகையால், டமில்லே, எவ்வளவு ஜாஸ்தியா இங்கிலீஷ், சமஸ்கிருத, இந்தி முதலிய பாஷைப் பதங்களைச் சேர்த்துக் கொள்ளுகிறோமோ, அவ்வளவு தூரம் தமிழ் அபிவிர்த்தியாகும், என்று காரணங்கூறுவார்கள். அறியாமையும், தமிழ்க்கொலையும், தாய்மொழிப் பற்றுமில்லா இவ்வழக்குரை (வாதம்)யை அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தவர்களில் தலைமை படைத்தவர்கள் யார்? தமிழ்க் கொலைத்தொண்டர்கள் தமிழ் மொழியைப் பண்டைக் காலந்தொட்டு இழிவாகப்பேசி வடமொழியை உயர்த்துக் கூறித் தமிழை ஒழிக்கக் கங்கணங் கட்டித் திரியும் ஆரியப் பார்ப்பனீய வெறிபிடித்த பார்ப்பனர்களும், அவர்கள் நடத்தும் ஆனந்த விகடன், சுதேசமித்திரன், தினமணி, ஹனுமான், முதலிய பார்ப்பன செய்தித்தாள்களும் அவற்றின் வால் பிடித்து வாழும் ஆனந்தபோதினி தமிழ் மணி முதலிய செய்தித்தாள்களும் பார்ப்பனர்கள் கொள்கையைப் பாராட்டுவதாலேயே பணமும் பட்டமும் பெற்று வாழலாம் என்னும் உண்மை உணர்ந்த மானமற்ற தமிழர் சிலரும் ஆவர். இனி, அவர்கள் கூறும் போலிக் கூற்றை ஈண்டாராய்வோம். மேற்காட்டியவாறு ஆங்கிலச்

சொற்களைத் தமிழிற்கலப்பது தானா தமிழை வளர்க்கும் வழி? ஆங்கிலர் இவ்வாறு தானா தங்கள் மொழியில் தமிழ்ச சொற்களைச சேர்த்துப் பேசுகின்றனர்? நூறு ஆங்கிலச் சொற்கள் கொண்டதோர் சொற்றொடரில் எண்பது தமிழ்ச் சொறகளைக் கலந்து பேச தன் மதிப்பும், மொழிப்பற்றுமுள்ள எந்த ஆங்கிலேய மகனும் ஒருப்படமாட்டான். அவன் ஒருப்பட்டாலும் ஆங்கிலங்கற்ற தமிழன் "அருமை ஆஙகிலததிலா இழிநத தமிழைச சேர்ப்பது; இழிவு, இழிவு" என ஒதுக்கி விடுவான். தமிழில் ஆங்கிலம, வடமொழி முதலிய பிறமொழிச சொற்களை ஏராளமாகக் கலந்து பேசியும் எழுதியும் வரும பார்ப்பனர்களும், பார்ப்பனர் அடிமைகளாகிய போலித் தமிழர் சிலரும் மொழி வளர்ச்சிக்குப் பிறமொழிக் கலப்பு இன்றியமையாது எனக் கூறும் தம கூற்றுப்படி இந்து, மெட்ராஸ் மெயில், இண்டியன் எக்ஸ்பிரஸ் முதலிய ஆங்கிலச் செய்தித்தாள்களிலும், வடமொழித்திங்கள் வெளியீடுகளிலும், இந்திச செய்தித்தாள்கள் வெளியீடுகளிலும தமிழ்ச சொற்களை நூற்றுக்கு ஐந்து விழுக்காடாவது கலந்து எழுதுவார்களா? என்று அறை கூவுகின்றோம். தமிழ்க்கொலை செய்யும் ஆனந்த விகடனே! தமிழ் வளர்ச்சிக்காக நீ கூறும் "அறிவு நிறைந்த பிறமொழிக்கலப்பு" கொள்கையை இந்துஸதானி மக்களுக்குக்கூறு; வடமொழியில் தமிழைக் கலந்து எழுது; ஆங்கிலத்தாள்களில் தமிழ்ச்சொற்களை ஏராளமாகக் கலந்து கட்டுரை எழுது; நீ எழுதாவிடினும் தமிழ்க்கொலை புரியுங்கொலைஞர்களில் ஒருவரும, தமிழ் நூலறியாப்புலவர்களால் பெரும் எழுத்தாளர் எனக்கொண்டாடப்படுபவரும் ஆன ஸ்ரீஜத் எஸ். வி. வி. அவர்கட்கு உன் அரிய ஆராய்சசி முடிபைக் கூறி அவரைக் கொண்டு நூற்றுக்குப் பத்துத் தமிழ்ச் சொற்களையாவது கலந்து ஆங்கிலச செய்தித் தாள்களில் கட்டுரை எழுதச்செய்; அப்படிச் செய்தால் உன் அறிவுக்கும், உனக்கும், உன்னைப்பின்பற்றும் எஸ் வி. வி. போன்றார்க்கும் நல்ல பாராட்டும, நல் விருந்துகளுங்கிடைக்கும். நூற்றுக்கு நூறு பார்ப்பனர்கள் தமிழை

வளர்க்கும் திருப்பணியில் (தமிழ்க்கொலை) ஈடுபட்டுத் தமிழில் பிறமொழிக் கலப்பை ஏன் வேண்டுகின்றார்கள் தெரியுமா? இதோ பாருங்கள். அவர்கள் திருமண அழைப்பு ஒன்றை.

வடமொழியால் தமிழ் கெட்ட வரலாறு.

ஸ்ரீ லக்ஷ்மி வேங்கடேசப்பிரசன்ன ஹ விவாஹ முஹூர்த்தப்பத்ரிகை. மகா-ா-ா-ஸ்ரீ சேஷசாயி அவர்களுக்கு உபய குசலோபரி. நாளது ஈஸ்வர-ஹூ வைகாசி-மீ 10-தேதி ஆதித்தவாரமும், வைசாக சுத்த சதுர்தசியும் ஸ்வாதி நக்ஷத்திரமும கூடிய சுபதினத்தில் பகல் 12-மணிக்கு மேல் 1½-கருள்ளாக ஸிம்ஹலக்கனததில் எனது ஜேஷ்ட குமாரத்தி சௌபாக்கியவதி சத்தியவதியை இராமநாதபுரம் ஜில்லா நாராயணபுரம கிராமத்திலிருக்கும மிராஸ்தார் மகா-ா-ா-ஸ்ரீ சோமநாதராவின் ஜேஷ்ட குமாரர் சிரஞ்சீவி பூவராக மூர்த்திக்குக கன்னிகாதானஞ் செய்து கொடுப்பதாய்ப் பெரியோாகளால் நிசசயிககப்பட்டிருக்கிறபடியால ஷை சுபமுகூர்த்தம தஞ்சாவூர் டவுன் கீழ ரத வீதி எனது கிரஹத்தில நடக்கிறபடியால் தாஙகள் இஷ்டமித்ர பந்து ஜனஙகளுடன் விஜயம் செய்து ஷை முகூர்த்தத்தைச சிறப்பாய நடததித்தந்து வதூவரர்களை ஆசீர்வாதஞ் செய்யக் கோருகின்றேன.

இப்படிக்குத் தஙகள் விதேயன்

எம். ஆர். ரங்காச்சாரியார்

இண்டியன் எக்ஸ்பிரஸ், தினமணி, நிருபர்.

இத்திருமணத்தாளில் உள்ள சொற்கள் 93 இதில் சமஸ்கிருதச் சொற்கள் 70 தமிழ் 23. தமிழில் பிறமொழிச் சொற்களைக் கலக்கக் கூடாதென்று கூறினல் நூற்றுக்கு எண்பது விழுக்காடு தமிழில் வடசொற்களை இவ்வாறு கலக்க முடியுமா? கலந்து தமிழைக் கொல்ல முடியுமா?

பார்ப்பனர் தம்மொழியை (வடமொழி) வளர்க்கும் வகையை மனதில் கொண்டு தான், தமிழ்வளரப் பிறமொழிக் கலப்பு வேண்டும் வேண்டும், என்று கூறிக் கூறி இங்ஙனம் தமிழில் ஏராளமாக வடசொற்களைச் சேர்த்துத் தமிழ்ச் சொற்களை எல்லாம் நூற்றுக்கணக்காகக் கொலை செய்தார்கள். செய்தும் வருகிறார்கள். அடிமைத் தமிழர்களே! இக்கொலைச் செய்கை தங்கட்குத் தெரிய வில்லையா? விளங்க வில்லையா? விளக்கமாக எழுதுகிறேன் பாருங்கள், இத்திருமணத்தாளில் உள்ள விவாகம், வருஷம், மாதம் என்ற வடசொற்களுக்குத் திருமணம், ஆண்டு, திங்கள் என்று தனித்தமிழ்ச்சொற்களைக் கூறினால் தமிழர்க்குத் தெரியாது, விளங்காது. வடமொழி தமிழ் நாட்டில் புகும் முன்பு நாம் திருமணம், ஆண்டு, திங்கள் என்று தமிழில் தான் சொல்லி வந்தோம் ஆரியராகிய பார்ப்பனர்கள் வருகையால் அவர்கள் கற்பித்த சொற்களை ஏற்றுக் கொண்டு தமிழ்ச் சொற்களைக் கைவிட்டோம்; அழித்து விட்டோம். அம்முறையில் திருமணம், ஆண்டு, திங்கள் முதலிய ஆயிரக்கணக்கான சொற்களை அழித்தொழித்து விட்டோம். இன்னும் பார்ப்பனர்கள் தங்கள் சொற்களைத் தமிழில் புகுத்தித் தமிழ்ச் சொற்களை அழிக்கப் பணியில் முனைந்து நிற்கின்றார்கள் என்பதை அத்திருமணத்தாள் கொண்டே விளக்குவோம். நல்ல நாள், இரண்டு பக்கமும், நலம், மூத்தமகள், மூத்தமகன், உறுதி, நகர், தேர், வீடு, வாழ்த்து, அன்பன் என்ற விளங்கக் கூடிய தமிழ்ச் சொற்கள் பதினொன்றை அழித்து விளங்காத சுபதினம், உபயகுசலோபரி, ஜேஷ்ட குமாரத்தி, ஜேஷ்ட குமாரன், நிச்சயம், டவுன் ரதவீதி கிரஹம், ஆசிர்வாதம், விதேயன் என்ற பதினொன்று வடசொற்களை அத்திருமணத்தாளில் பார்ப்பனர் எழுதியதேன? வடசொற்களை வழக்கில் கொணர்ந்து தமிழ்ச் சொற்களை அழிக்கவேயாம். அஃதெப்படி? ஆண்டு, திங்கள் என்று தமிழ்ச் சொற்கள் வழக்கத்தில் இருந்த காலத்தில் ஒருவர்க்கும் புரியாத வருஷம், மாதம் என்ற சொற்களைத் தமிழில் கலந்து பேசியும் எழுதியும் வந்தனர். பார்ப்பனர்,

அதனால் நாளடைவில் வடசொற்களாய வருஷம், மாதம் என்பன நிலை நின்று ஆண்டு, திங்கள் என்ற தமிழ்ச்சொற்கள் அழிக்கப்படவில்லையா? அந்த அறிவைக்கொண்டு தான் இன்றும் பார்ப்பனர்கள் யாருக்கும் புரியாவிட்டாலும், அங்குரார்ப்பனம், உத்கிருஷ்டம், வர்ஜாவர்ஜம், ராஷ்டிர பதி முதலிய ஆயிரக்கணக்கான வடசொறகளைத் தமிழில் நுழைத்து வழங்கி வருகின்றனர். போதாக்குறைக்கு ஆங்கிலச சொறகளையும் வரைதுறையின்றி முன் காட்டிய படி தமிழிற்கலந்து வருகின்றார்கள். இப்படிச் செய்து கொண்டே போனால் இன்னும் ஓர் தலைமுறைக்குள் தமிழைக்குழிதோண்டி புதைக்கலாம் என்று அவர்கள் உறுதி செயது கொண்டிருக்கின்றார்கள்.

அவ்வுறுதியை நிறைவேற்றும் எண்ணத்துடன் தான் ஆரியர் தலைவர் - பார்ப்பனீயப் பிரசாரகர் திருவாளர் இராஜகோபாலாச்சாரியார் கட்டாய இந்தியைக் கொண்டு வந்திருக்கின்றார். தமிழில் பதினாயிரம் சொற்கள் இருக்கின்றதென்று வைத்துக் கொள்வோம். அவற்றில் நாலாயிரம் தமிழ்ச சொற்களை நீக்கி அதற்கு விடையாக ஆங்கிலச் சொறகள், நாலாயிரம் தமிழ்ச்சொறகளை ஒழித்து வட சொற்கள், இரண்டாயிரம் தமிழ்ச் சொற்களை நீக்கி அதற்கு ஒத்ததான இரண்டாயிரம் இந்திச சொற்களைக் கலந்து பேசினால் இன்றில்லா விட்டாலும் ஓர் நாள் தமிழ் கெட வேண்டியதுதானே! அழிய வேண்டுவதுதானே! ஆனால் அவ்வாறு தமிழை அழிக்கப் பார்ப்பனர் உறுதிகொண்டிருக்கின்றபடி நடக்கப்போவதில்லை. என்னை?

தனித்தமிழ்ப்போர்

தமிழர்கள் தனித்தமிழ்க் கொள்கையால் தான் தமிழ் வளர்ச்சியடையும் எனக்கண்டு கொண்டார்கள். தனித் தமிழிலேயே பேசவும், எழுதவும் தொடங்கி விட்டார்கள்.

தமிழ்ப்பாதுகாப்புக்காக எத்தகைய கொடிய துன்பங்களையும் ஏற்கத் துணிந்து விட்டார்கள். ஆடவர் மட்டுமல்ல. பெண்டிரும் சிறை செல்ல முற்பட்டு விட்டார்கள். அடக்கு முறையாட்சியை மகிழ்ச்சியுடன் வரவேற்று விட்டார்கள். உயிரையும் வழங்க முற்பட்டு விட்டார்கள் என்றால் மேலும் கூறவேண்டியதில்லை. ஆகவே, இனிமேல் தமிழைக் கெடுத்து விடலாம் என்றோ, அழித்து விடலாம் என்றோ பார்ப்பனர்கள் எண்ணுவாராயின் அது பகற்கனவாகவே முடியும். இவ்விடத்தில் ஒன்று கூறிவிட விரும்புகின்றோம்; ஆயிரத்தில் ஓர் பார்ப்பனர் தமிழ்ப் பற்றுடையவராக இருப்பார். ஆனால், அவருங்கூடத் தனித்தமிழை ஏற்க மாட்டார். ஏன் எனில்? தனித்தமிழில் வடசொற்கள் கலத்தலாகாது என்பதனால் எங்க. தனித்தமிழில் வட மொழி மட்டுமல்ல, பிறமொழிகள் எவையுமே கலத்தலாகாது என்பதுதான் தனித் தமிழர் கருத்து. பிறமொழிக்கே உரியதாய், நம நாட்டிலில்லாததாய், தமிழில மொழிபெயர்க் கக்கூடாததாய உள்ள ஒரு சில சொற்களை மட்டும் தமிழில் சேர்த்துக்கொள்வதால் தனித் தமிழ்க் கொள்கைக்கு இழுக்கில்லை. ரெவில் சேம்பர்லேன, லண்டன், ஆப்பிள் முதலியவைபோல்வன அவை, இனி, பிறமொழிக் கலப்பால் ஓர் மொழி எவ்வாறு அழிந்தொழியும் என்பதற்கோர் சிறந்த மேற்கோளை எடுத்தெழுதுவோம்.

பிற மொழி கலப்பால் தமிழ் கெட்டு மலையாள மொழி தோன்றிய வரலாறு.

மலையாள நாடு 500 ஆண்டுகட்கு முன் தனித் தமிழ் நாடாக விளங்கிற்று. அக்காலத்தில் அதற்குச் சேர நாடென்று பெயர் வழங்கிற்று. அந்நாட்டவரெல்லோரும் தமிழே பேசித் தமிழராகத் திகழ்ந்தனர். புறநானூறு, அகநானூறு முதலிய பண்டைத் தமிழ் இலக்கியங்களில் எல் லாம் சேர அரசர்கள் தமிழில பாடிய பாக்கள் நிரமப

இருக்கின்றன. சேரன் செங்குட்டுவன் தம்பி சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோ அடிகள் தமிழர் அன்றோ? ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு மலையாள நாட்டை யாண்டவரும், அறு பத்துமூன்றடியார்களில் ஒருவருமான சேரமான் பெருமாள் நாயனர் தமிழரல்லவா? அவரருளிய "பொன் வண்ணத்தந் தாதி" என்ற சீரிய தமிழ் நூல் சைவதிருமுறைகளில் பதினோராந திருமுறையைச் சேர்ந்ததன்றோ? குலசேகர ஆழ்வார் தமிழ்ச் சேரலரோ? அவாருளிய திருமால் வணக்கச் செய்யுட்களை இன்றுந் திருவாய் மொழியில் காண்கின்றோமே? நூறாண்டுகட்கு முன்பு வரையில் திருவிதாங்கூர் ஆட்சி தமிழிலன்றோ நடைபெற்றது.? அரசியல் ஏடுகள் எல்லாம் தமிழ் எழுதில் தமிழ் மொழியி லன்றோ வரையப்பட்டிருக்கின்றன. மலையாள மொழி முன்னும், இன்னும் தமிழ்மொழியாகவே இருக்கின்றதென் பதை அம்மொழியிலுள்ள சொற்களையும பாட்டுகளையும் படித்தால் சிறு பிள்ளைகளும் செவ்வையாகத் தெரிந்து கொள்ளலாமே! வேண்டுமானல் சான்றாக இந்தப்பாட்டைப் பாருங்கள்.

பைங்கிளியே பைங்கிளியே
களி ஆடடான வருமோ நீ
பாடில்லா சள்ளிகளால்
கூடு சமயிக்கான் போகுன்னு
செறுநாயே செறுநாயே
களியாடடான் வருமோ நீ
பாடில்லா எஜமான்றே
வாதிலு காக்கான் போகுன்னு
களியாதே வேலைக்காய்
எல்லோரும் போயப்போழ்
நாளிச் செறு பய்யன்
போயல்லோ களரியிலும்

களியாடிடான்—விளையாடுதற்கு, போகுன்னு—போகிறேன் செறு—சிறு, பாடில்லா—முடியாது, வாதிலு—வாயில், போழ்—போது, களரி—பள்ளிககூடம்

இனி உரை நடையில் மேற்கோள் ஒன்று காண்க:—

"கிழவனும் கழுதையும்

ஒரு கிழவனும் ஆயாளுடே செறிய மகனும் கூடி ஒரு கழுதையை வில்கானாயி அடுத்த சந்தையிலேக்கு கொண்டு போகையாய் இருன்று. அப்போழ் ஒரு வழிப்போக்கன் அவரோடு இங்ஙனே சோதிசசு"

அயாளுடே-அந்த ஆளினுடைய, வில்கானாயி-விற்பவனாகி, சோதிசசு-பேசினான்

இவற்றால் மலையாள எழுத்தே மலையாள மொழியைத் தமிழிலிருந்து தனிப்படுத்தியதென்பதும், அவ்வெழுத்துங் களில்லாவிடின் மலையாளம் தனித் தமிழே என்பதும புல வர்கட்கு நனகு விளங்கும். மலையாளத்திலுள்ள சொற்கள் அனைத்தும் தமிழ்ச் சொறகளே. சில சொற்கள் தமிழ்ச் சொற்களின் பகுதியைக்கொண்டே ஆக்கப்பட்டன; சில சொற்கள் பேசசு வழக்கிலுள்ள கொச்சைத் தமிழ்ச சொற் களேயே கொண்டுள்ளன. மலையாளம் தமிழின் வேறு பட்ட மொழியானதேன் என்றால்? ஒரே சொல்லில் சொல்லி விடலாம்; சேரநாட்டுத் தமிழில் வடசொற்கள் அளவின்றிக் கலந்ததே காரணமென்று. வட மொழி சேர்க்கைக்குப் பின் யாக்கப்பட்ட மலையாளப் பாடல்கள் உரை நடைகளில் வட சொற்கள் மிக மிக மிகுதியாக வழங்கப்பட்டிருக்கின் றன. இப்போதுள்ள மலையாள செய்தித் தாள்கள், வெளி யீடுகள் அனைத்தும முழு வட மொழிகளாகவே இருக்கின் றன என்பதை "நியமசபாயோகத்தில் அவதரிப்பிக்கான் இருக்கின்ன கர்ஷகா விசுவாச பில் ராஜாங்கம் உத்தேசிக் கின்ன விதம் கடக்காருக்கு வாஸ்த்தவத்தில் ஆஸ்வாஸ

பிரதமாகணமெங்கில் சிலபேத கதிகள் வருத்தேண்டதாயிட்டுண்டு. பிரதான வஸ்தைகள் ராஜ்யத்து பூர்வபக்ஷபேரும் கடத்தில் பிடுன்னதும, அதில் நின்னும ரக்ஷபடான்னு. அவரிக்கு ஸ்யபரிசிரமங்கொண்டு சாதிக்கானு ஆவுன்னதுமாயா அசாதாரணமாய விஷம கட்டங்களில் பொதுக்ஷேமத்தையும், சமாதானத்தையும் முனனிறுததி முதலியன கூடிபாதிகுன்ன விதத்தில்'' என்னும மலேயாளசசெயதித்தாள் ஒன்றிலுள்ள இவ்வரிகள் தெளிவாக விளங்கும். இவ் வரிகளில் உள்ள சொறகள் 45 இதில் வட சொற்கள் 30, மலேயாள சொறகள் 15. இப்பதினேந்து மலேயாளச சொறகளில் தமிழ் வடிவோடு விளங்குஞ் சொற்கள் 8. தமிழ்சசொல் சிதைநத மலேயாளச சொறகள் 7. இவற்ருல் வட சொற்களை நீக்கிக் கொசசைத் தமிழ்ச சொறகளைத் திருததி நோக்கினுல மலேயாளம தமிழே என உண்மை மறுககப்படாமை காண்க.

இக்காலத்தில் ஆரியரான ஆசசாரியார் காங்கரசின் பேரால் தன்னரசின்பேரால நாட்டுரிமையின் பேரால் தமிழர்களின் கருத்தைப் (ஒட்) பெறறுப் பாரப்பன ஆட்சியை நிலேநாட்டிப் பார்ப்பனர்களுக்கு வேலே கொடுத்துத் தம் ஆரிய நாகரீகத்திணப் பரப்புதற்குக் கட்டாய இந்தியைக் கொணர்ந்தார். காரணங் கேட்டதற்கு, வயிற்றுப் பிழைப்புக்கு நாட்டொற்றுமைக்கு என்ருர். இதுபோலவே, எழுநூருண்டுகட்கு முன்பு மலேயாள நாட்டில தோன்றிய ஆரியரான சஙகராசசாரியார் வடமொழியை யாவரும் படிக்க வேண்டுமென்ருர். காரணங் கேட்டதறகு "தேவ பாஷை அது" எனருர். அனேவரும் ஆரியங்கற்றனர். இக்காலத்தில் ஆங்கிலச் சொற்களைத் தமிழில் கலந்து பேசுவதும், அம்மொழியைப் பயில்வதும், அதில் நூல்கள் எழுதுவதும் மதிப்புடையதென்று கருதப்படுவதுபோல அந்நாளில் கருதபபட்டு வட மொழிக் கல்வியும, வடமொழிப் பேச்சும், வடமொழிக் கலப்பும ஏறபட்டுத தமிழ் கெட்டது. உடனே சூழ்சசி மிக்க ஆரியர் மலேயாள எழுத்தை ஏற்படுத்தினர்.

அதற்கேற்றபடி தமிழ்ச் சொற்களைக் கொச்சை வடிவில் அமைத்துக்கொண்டனர். வடமொழியிலிருந்து மலையாளம் வந்ததென்று தாம் கூறும் போலிப் பொய்யுரையை நிலை நாட்டுதற்காக வட மொழி இலக்கணத்தைப் பின்பற்றி மலையாளத்திற்கு இலக்கணமும் வகுத்துவிட்டனர். இவ் வுண்மையை ஆசிரியர் மறைமலையடிகளார் எழுதியுள்ள "இந்தி பொது மொழியா" என்ற தமது நூலில் "மலையாள மொழி இன்றைக்கு முந்நூறாண்டுகட்கு முன் முழுதுந் தமிழாகவே இருந்தது. ஆனால் அத்தமிழ், இத் தமிழ் நாட்டில் வழங்குஞ் செந்தமிழ் மொழியின் சொற்கள் திரிந்த கொச்சைத் தமிழாகும். என்றாலும், அத்திரிபுகளை நீக்கிப் பார்த்தால் மலையாளம் முற்றுந் தமிழ்மொழியாகவே காணப் படுகின்றது. மலையாள மொழியில் முதன் முதல் இராமா யணத்தை மொழிபெயர்த்துப் பாடியவர் 'கன்னசபணிக்கர்' என்பவரேயாவர். இவர் இன்றைக்கு 587 ஆண்டுகளுக்கு முன் அதாவது கி. பி. 1350 ஆம் ஆண்டிலிருந்தவர். இவ ரியற்றிய இராமாயண மொழி பெயர்ப்பில், வட சொற்கள் சிற்சில மிக அருகி ஆங்காங்குக் காணப்படுகின்றன. இவர்க்குப் பின் மலையாள மொழியில் நூலியற்றினவர் கி. பி 1550 ஆம் ஆண்டிலிருந்த 'செருசசேரி நம்பூரி' என் பவரேயாவர். இவர் தாமியற்றிய 'கிருஷ்ணகதா' என்னும் நூலைப் பெரும்பாலும் வட சொற்கலவாத தனி மலையாள மொழியில் ஆக்கியிருப்பது மிகவும் பாராட்டற்பாலதாய் இருக்கின்றது. இவர்க்குப்பின் கி பி. 1650ம் ஆண்டிலி ருந்த "எழுத்தச்சன்" என்பவரோ வடமொழியிலிருந்து தாம மொழிபெயர்த்தியற்றிய "மகாபாரதத்திலும், வேறு சில புராணங்களிலும் தொகுதி தொகுதியாக வடசொற்கள சொற்றொடர்களை அளவின்றிப் புகுத்தி மலையாள மொழி யைப் பாழாக்கினவர். எடுத்துக்காட்டியவற்றால், மலையாள மொழி, வட மொழிக் கலப்பால் தமிழின் வேறாயப் பிரிந்து வேறொரு மொழிபோல் வழங்கலானது, இன்றைக்குச் சிறி தேறக்குறைய முன்னூறாண்டுகளாகத் தாம என்பது தெற் றென விளங்கா நிற்கும" என்று விளக்கியது கொண்டு

நன்கு அறியப்படுகின்றது வடமொழிக் கலப்பால் தமிழ் கெட்டழிந்து மலையாளமானது போலவே, தெலுங்கு, கன்னடம், துளுவம் முதலிய மொழிகளும வடமொழிக் கலப்பால் தமிழ் கெட்டழிந்து பிறந்தனவாகும.

மொழியழிவே நாட்டழிவு.

"வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" என்ற

தொல்காப்பியப்பாயிரத்தால் ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னிருந்து ஆயிரம் ஆண்டுகட்கு முன்வரையில் தமிழ் நாடு வடக்கே வேங்கடத்தை(திருப்பதி)யும், ஏனைய மூன்று எல்லைகளில் கடலையுமகொண்டு பரதகோர் நாடாக இருந்த தென்னும உண்மை புலனுகின்றதன்றோ? ஆனால் இன்றைய தமிழ் நாட்டின் எல்லை எவ்வளவு சுருங்கிவிட்டது. காரணமென்ன? ஆரிய மொழிச் சனியன் தமிழில் புகுந்தது. அதனால் தமிழ் மொழி கெட்டு மாறுபட்டு தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் என்ற மொழிகள் தோன்றி அவை வழங்குந் தமிழ் நாடு ஆந்திர நாடென்றும், கன்னட நாடெனறும், மலையாள நாடென்றும, துளுவ நாடெனறும் பிரிந்து தன்னெல்லையில் சுருங்கிவிட்டதனறோ? அதனால், ஆந்திரர், கன்னடர், மலையாளர், துளுவர் முதலியோர்கள் தமிழ்க்கலை நாகரீகக்கட்கு மாறாய் ஆரிய நாகரீகக் கலைகளை ஏற்றுக்கொண்டனரன்றோ? இதனால் தமிழ்மொழியின் அழிவே, தமிழ் நாட்டின் அழிவென்பது அறியப்படுகின்றதன்றோ?

வட மொழியால் தமிழ் கலை நாகரீகங்கள் அழிந்த வரலாறு

ஆரியக்கலைகள், நாகரீகங்கள், கடவுளர் பலர் உண்டென்றும், தெய்வத்தினிடம் பக்தியுடன் இருப்போர் எத்தகைய

தீய செயல்களும் புரியலாம் என்றும், தெய்வத்தின் பேரால் உயிர் பலி இடலாமென்றும், பிறப்பினால் ஒருவன் உயர்ந்தோன் என்றும், ஒருவன் கண்ணாலும் பார்க்கப்படாதவனென்றும், பார்ப்பனரே நிலவுலகக் கடவுள் என்றும், பார்ப்பனரல்லாதார் யாவரும் அவர்கட்கு அடிமைகள் என்றும், உலகிலுள்ள எல்லா இன்பங்களும், உடைமைகளும், நலங்களும் பார்ப்பனரல்லாதாருக்கு உரிமையுடையதன்று என்றும், ஊனுங் கள்ளுமே உயர்ந்ததென்றும், ஆணுக்குப் பெண் அடிமை என்றும் கூறும். அன்றியும், அது பல இழிவான அருவருக்கத் தகுந்த பகுத்தறிவுக் கொவ்வாத பழக்க வழக்கங்களையுந் தன்னகத்தில் கொண்டிருக்கின்றது. தமிழ்க் கலைகளோ நாகரீகங்களோ என்றால், "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்று முழங்குகின்றது. 'பிறப்பொக்கும் எவ்வுயிர்க்கும்' என்று பெருஞ்சொல் கூறுகின்றது; 'சாதி யிரண்டொழிய வேறில்லை' என்று சாற்றுகின்றது 'எல்லாரும் இன்புற்றிருக்க'ச் செய்வதே என் கடன் என்றெழுகின்றது. அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலைதானே வந்தெய்தும்' என்று பாடுகின்றது. "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்றொலிக்கின்றது. "மக்களுக்குச் செய்யுந் தொண்டே கடவுள் வழிபாடு" என்று பறையறைகின்றது. "பிற உயிரைத் தன்னுயிர்போல் எண்ணி அவற்றினுக்குத் தொண்டு புரிவதே கல்வியின் பயன்' என்று கழறுகின்றது. "கொடுமை செய்தோன் கொடுமைக்குட்பட்டே தீரவேண்டும்" என்று குறிக்கின்றது. 'ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று" என நவில்கின்றது. ஆணுக்கும், பெண்ணுக்கும் உரிமை சமம் என்று சாற்றுகின்றது.

தோழர்களே! பாருங்கள் ஆரியர் — தமிழர் கலை நாரீகங்களுக்குள்ள வேறுபாடுகளை. ஆரியக் கலை நாகரீகங்களை நாம் ஏன் வேண்டாமென்கிறோம், வெறுக்கின்றோம், ஒதுக்கின்றோம் என்பதற்கு ஓரளவு சுருக்கமாக மேலே காட்டிய பொல்லா கோட்பாடுகளுக்குத்தான் எனவுந் தமிழ்க் கலை

நாகரீகங்களை ஏன் போற்றுகின்றோம், ஏன் பரப்ப விரும்புகின்றோம் என்றால், மேலே ஓரளவு சுருக்கமாக காட்டிய அவற்றின் உயர்ந்த கோட்பாடுகளுக்காகத்தான் எனவும் உலகவர் உணரல்வேண்டும். ஆரிய மொழியாம் வடமொழி நூல்களைப் படித்து அதிலுள்ள பொள்ளாப் பழக்க வழக்கங்களைத் தமிழ் நாட்டில் புகுத்தியது முதல், தமிழர் பல் வகுப்பினராக வேறுபட்டு — ஒற்றுமை குலைந்து—கல்வியின்றி வறுமைப்பட்டு வாழ்ந்துவருகின்றார்கள். இந் நிலை மாறத் தமிழ்க்கலை நாகரீகங்கள் ஓங்கவேண்டும். அதனால் நாட்டிலுள்ள தீண்டாமை, மூடப் பழக்க வழக்கங்கள் எல்லாம் மறைந்து தமிழ் மக்கள் இன்புற்று வாழலாம். ஆரியக்கலை நாகரீகங்கள் பார்ப்பனருக்கு நன்மைதருவன. தமிழருக்குத் தீமை தருவன. இதுகாறுங் கூறியவற்றால் வடமொழிக் கல்வியால் ஆரியக் கலை நாகரீகங்கள் ஓங்கித் தமிழ்க் கலை நாகரீகங்கள் அழிந்து தமிழ் மக்கள் சொல்லொணுத் துயருற்று வருந்துவதறிந்தோம்.

கட்டாய இந்தியின் நோக்கம்.

ஆரியராம ஆசசாரியார் ஆரியக் கலை நாகரீகங்களை வளர்க்க கட்டாய இந்தியைக் கொணர்ந்திருக்கின்றாரென்பதை "இந்தியாவின் உண்மையான கலை, நாகரீகம், சமயம், ஞானம் இவற்றை அறியவேண்டுமானுல் வட மொழி மூலமாகத்தான் முடியும். வடமொழி படிக்க இந்தி பெரிதும் பெரிதும் துணை செய்யும் ஆதலின், கட்டாய இந்தியைக் கொணர்ந்திருக்கின்றேன்'' என்ற ஆசசாரியாரின் சென்னை லையோலா கல்லூரிச்சொற்பொழிவு நன்கு விளக்கும். அன்றியும் ஆசசாரியார் ஆரியக் கலை நாகரீகங்களை வளர்ப்பதில் அக்கறை கொண்டிருக்கின்றாரென்பதைத் தம் இந்திஸ்வபோதினி என்ற நூலின முகவுரையில நம முன்னோர்களுக்காக சமஸ்கிருதத்தையும் மாணவரனைவரும் கட்டாயமாகக் கற்க வேண்டும் என்று எழுதியதுகொண்டு தெரியப்படு

கின்றதன்றோ? முன்னோர் என்பது ஆச்சாரியார் குறிப்பிடு வது ஆரியரேயன்றோ?

திருவாளர் ஆச்சாரியார் மட்டுமல்ல அவர் வகுப்பைச் சார்ந்த யாவரும் ஒருமுகமாயத் தமக்கு (பார்ப்பனர்) ஆணை யாயிருக்கும் போதெல்லாம உலகத்தார் என்ன கூறினும, எவ்வளவு எதிர்த்தாலுந தம் கலைகளை வளர்ப்பதில் கண்ணுங் கருத்துமாய் காரியங்கள் செயது வருகின்றனர். இதற கிசைநத எடுத்துக காட்டுகளை எண்டுககாட்டுவோம். பெரிய சீர்திருத்தக்காரர் எனக் கொண்டாடப்படும வைணவ சமயத் தலைவர் இராமானுஜாச்சாரியார் தமிழைத் தாய் மொழியாகக்கொண்டிருநதும் தாமியற்றிய அரிய தோர் நூலை வடமொழியிலேயே எழுதிவைத்தார். தமக் குப்பின் தம வகுப்பினருக்கும், பார்ப்பனரல்லாதவருக்குங் குருமார்களாகத தம் மாணவர்களில எழுபத்துநான்கு பார்ப் பனர்களையே குருமாாகளாக்கிசசென்றார். அவர் மாணவர் களில் அவரால் பாராட்டப்பெறற பார்ப்பனரல்லாத மாண வர் பலரிருந்தும் அவர்களில் ஒருவரையேனும அவர் குரு வாக்கினாரலலர். இனனும் வேதாந்த தேசிகர் எனனும வைணவப் பார்ப்பனத தலைவர் தமிழ் மறையாம் திருவாய் மொழியைவிட ஆரிய மறையாம் வடமொழிக்கே ஏறறமும் உரிமையும் அளிததுச சென்றார். இவற்றால் ஆரிய நூல் களுக்கு அளவறற பெருமை உண்டாயது. இவர் மாணவ ரனைவரும வடமொழியையே பெரிதெனப் போற்றுவர். அதனால் இவரையும இவரது கூட்டத்தாரையும் வடகலையார் (வட மொழிக கலைகளைப் போற்றுவார்) எனறும் தெனகலை யார் (தமிழ்க் கலைகளைப் போறறுவார்) கூறுகினறனர். சங்கராச்சாரியாரும தாம இயறறிய நூல்களனைததையும ஆரிய மொழியிலேயே ஆக்கினர். ஆரியரது வேதஙகளையே பெரிதெடுத்துப் பாராட்டினா இஙகு காட்டிய முறகாலப பார்பபனர்கள மட்டுமல்ல, இக்காலத்து பார்ப்பனர்களில் நூற்றுககுத் தொண்ணூறறொன்பது பேர் வடமொழி நூல் களையே பாராட்டுவதும, பொருள் தெரிநதாலும் தெரியா

விட்டாலும் தப்புந் தவறாகவேனும் ஆர்வமுடன் வடமொழிப்பாடல்கள் சிலவற்றையேனும் பாடம் செய்து வைத்திருப்பதைப் பார்க்கின்றோம். தலைமை அமைச்சர் பார்ப்பனரிலிருந்து, தட்டு தூக்கும் பார்ப்பனர் வரையிலும் வடமொழி என்றால் தெரியாவிட்டாலும் மகிழ்ச்சியால் தம்மை மறந்து விடுகின்றனர். உணர்ச்சியால் ஊக்கங் கொள்கின்றனர்; உடனே கீதையைப்புகழ ஆரம்பித்து விடுவார்கள். வால்மீகியைக் கொண்டாடக் கூடுவார்கள். சாகுந்தலத்தில் மூழ்கிவிடுவார்கள். பார்ப்பனச்சேரி (அக்கிரகாரம்) மிகச்சிறியதாயிருந்தாலும், அங்குள்ளார் ஒருவர்க்கும் வடமொழி எழுத்துக் கூடதெரியாவிட்டாலும் அங்கொரு பார்ப்பனப்புலவர் தமிழிலுள்ள ராமயணத்தைக் கூறமாட்டார். வடமொழியிலுள்ள வால்மீகி ராமயணத்தைப் படித்து வடமொழி கலந்த தமிழில் பொருள் விரிப்பார். ஒவ்வொரு பார்ப்பன அதிகாரியும் ஊழியனும் கீதைச்சொற்பொழிவாளனாவன். திருக்குறள தெரிந்திருந்தாலுங்கூறமாட்டான். ஆச்சாரியார்கூட கண்ணன காட்டிய வழியெனப் பெயரிட்டு வட மொழியிலுள்ள கீதைக்கோர் உரை எழுதி விட்டார். ஏமாந்த தமிழனை ஏமாற்றத் தமக்கு வட மொழியிலுள்ள 'வட மொழி நூல்களிலுள்ள ஆர்வத்தைப் போலவே தமிழிலும் இருக்கின்றதென்பதைக் காட்டி ஆங்கிலத்தில் திருக்குறளுக்கோர் உரை எழுதியிருக்கின்றார். என்னே! ஆச்சாரியாரின் சூழ்சசியின் ஆழம்! உபநிஷத் பலகணி என்றோர் நூல்களையும் ஆசசாரியார் வெளியிட்டுள்ளார். அது வட மொழியிலுள்ள ஆரிய மறைகளைச சிறப்பிப்பது. ஆரிய கலைகளைப் பரப்புந்தொண்டில் தலைமை அமைச்சர் மட்டுமல்ல, மருத்துவ அமைச்சர் திருவாளர் டி. எஸ். எஸ். ராஜன் அவர்கள் கொண்டிருக்கும் ஊககத்திற்கோரளவுண்டோ? சில நாட்களுக்கு முன் திருப்பதியில் அவர் பேசும்போது இனி, வேதம படித்தவர்களையே திருக்கோயில்களில் குருக்கள்மார்களாக வைககப்போகிறேன். திருக் கோவில் வருமானங்கொண்டு வடமொழிக் கல்விகள் கற்பிக்கப்போகின்றேன்'' என்று பேசியிருக்கின்றார். திருப்

பதி, சீரங்கம் முதலிய வைணவ திருக்கோவில்கள் எல்லாம் தமிழ் மறையாம் தேவாரம் திருவாய் மொழிகளால் பெருமையும் பெருஞ் செல்வமும் பெற்றவை ஆதலின், அத்திருக்கோவில் வருமானங்கொண்டு அத்தமிழ் மறைகளை கற்பிக்கவேண்டும். அதில் சேர்ந்தவர்களையே குருக்கள் பள்ளிக்கு அமர்த்தவேண்டும. தேவாரம், திருவாய மொழி களை அருளிசசெய்த அடியார்கள் ஆழ்வார்களிலெல்லாம் பார்ப்பனரல்லாதவர்களே மிகுதி. ஆதலின், பார்ப்பனரல் லாத மாணவர்களையே குருக்கள்மார் வேலைக்குப் பெரும பான்மையாரைத் தேர்ந்துகொள்ளவேண்டும். இவ்வாறு செய்ய மனங்கொள்ளாமல மருத்துவர், ராஜன் அவர்கள் ஆரிய மறைகளைக் கற்பிககவும, பார்ப்பனருககே குருக்கள் பணியளிகக முன் நிறபதேன்? அவரோர் பார்ப்பனர்! வட மொழிககு மட்டும் தென்னுட்டில் அரசியலார் மேறபார்வை யில் அறுபது வடமொழிக் கல்லூரிகளிருக்கின்றன தமிழ் கல்லூரிகளோ இரண்டே. சென்னைப் பல்கலைககழகத் தில் ஆங்கிலத்துக்குப் பேராசிரியர் (புரபசர்) இருபபது போல வடமொழிக்கும இருக்கின்றூர். சம்பளமும் இருவ ருக்கும் சமமான முறையில தரப்படுகின்றது. தமிழுக்கு எவ்வளவு கூக்குரலிட்டும இன்றளவும் பல்கலைக்கழகததில் பேராசிரியர் நிலை கொடுக்கப்படவில்லையே இநதியைக் கட்டாய பாடமாக்கியதே தவிர பார்பபன அரசு இன்றள வும் தமிழைக் கட்டாயப் பாடமாக்கவில்லையே! காரண மென்ன? பல்கலைக்கழகம பார்ப்பனர் கையிலன்றோ இருக் கின்றது. இன்னும எவவளவோ இதுபற்றி எழுதலாம். இடமில்லை. ஏனை இவ்வளவும் எழுதினோம் என்றால், பண்டை நாளில் மட்டுமல்ல இன்றளவும் தமக்கு அதிகாரம கிடைத்தபோதெல்லாம் வடமொழிக் கலைகளை எவ்வாறு பாதுகாத்து வருகின்றூர்களென்பதைக் காட்டுதற்கேயாம. இம முறைக் கையாளும் வகையில்—பரப்பும் பான்மையில் தான் ஆசசாரியார் கட்டாய இந்தியைக் கொணர்ந்திருக்கின் றூர் என்பதை அவர் மொழிகளை எடுத்துக் காட்டியே ஒரு வாறு எழுதினோம்.

தமிழ்க் கலைகள் எங்கே?

இன்றைய தமிழ் நாட்டில் மேலே காட்டியவாறு பார்ப்பனர்கள் தொன்று தொட்டு தம் கலைகளை எவ்வாறு பாதுகாத்து பரப்பிவருகின்றார்கள் என்பதைச சுருக்கமாகக் கூறினோம். அவர்கள் செய்கையால் தமிழ்க் கலைகள் கேட்பாரற்றுப் படிப்பாரற்றுக் கிடக்கின்றன. இன்னும் ஆங்கில மொழி அரச மொழியாக இருந்தலின் தமிழரனைவரும அம்மொழியிலேயே நன்கு கற்றுப் பட்டமும், நிலையும் பெற வேண்டியவரானார்கள். பாட புத்தகங்களில படிக்கவேண்டுமென்று அரசியலாரின் சட்டமில்லாவிட்டால் தமிழ்க்கலை நூல்களின பகுதியைக்கூட அவர்கள் படித்திருக்கமாட்டார்கள். வயிறறுப் பிழைபபுக காரணமாகப் புலவர்களும், ஆர்வங் காரணமாக மிகச் சிலரும படித்திராவிட்டால் தமிழ் கலை நூல்கள் அச்சிடுவார்களின்றியும, வாஙகிப் படிப்பாரின்றியும் என்றோ அழிந்தொழிந்துபோயிருக்கும். பலலாயிரக் கணக்கான வெள்ளி (ரூபாய) களைச செலவிட்டுச சைவ சித்தாந்த நூற் பதிப்புக கழகமும, அவைபோன்ற நூல் களும வருமானங் கருதாமல் தமிழ் நூலகள் பலவற்றை அச்சிட்டு குன்றெனக் குவித்து வைத்திருக்கின்றன. அவற்றை வாங்கிப் படிககுந் தமிழர் தொகை தமிழ் நாட்டிலும, பிற நாடுகளிலும் முந்நூற்றுவர்க்கு மேலில்லை. இந நிலையில் மேற்கொண்டு நூல்களை அசசிட அவர்கள் அஞ்சுகின்றனர். இந்நிலை நீடிக்குமானால விரைவில தமிழ்க் கலைகள் மறையவேணடியனவே என்பதனை வருத்தமுடன் குறிப்பிடுகின்றோம் திருக் கோவில்களில் தமிழ் மறையை ஒழித்துவிட்டு ஆரிய மறைகள் ஓதபபடுகின்றன. மணச் சடங்குகளிலும், பிணச சடங்குகளிலும் ஆரிய மறைகளே ஆணை பெற்று விளஙகுகின்றன. அரசியல் நிலைகளில் ஆங்கிலம் ஆட்சி செய்கின்றது. இசையரங்குகளில் (சங்கீதக் கசசேரி) தெலுங்கு தாண்டவமாடுகின்றது. படக்காட்சிகளில் இந்தி பாராட்டப்படுகின்றது? இவ்வுயர்விடங்களில் அயல் மொழிகள் பீடும் பெருமையும் பெறறு விளங்குகின்றன.

அவ்விடங்களிலிருக்கும் உரிமை நம் தமிழுக்கன்றோ. எங்கே நம் அருமைத தமிழ்! நம்முயிர்த் தமிழ்! நம்மறிவுத் தமிழ்! பார்ப்பன ஆட்சியில்—வெள்ளையர் அரசால் நமமவா அறிவின்மையால்—விழிப்பின்மையால் நம தமிழ் வறிஞரிடத்தன்றோ வாழ்கின்றது. அறிவில்லாரிடத்தன்றோ அடைபட்டுகிடக்கின்றது! அடிமைகளிடத்தன்றோ குடிகொண்டிருக்கிறது! இவ்விரங்கத்தக்க நிலைமையிலுள்ள நம் தாய் மொழிக்கு, உரிமை மொழிக்கு ஆக்கந்தேடாமல், கட்டாயமாக்காமல், வட மொழியை வளர்க்க ஆசசாரியார் கட்டாய இந்தியைக் கொணர்ந்திருக்கின்றாரே! அந்தோ ஒதுங்கி கிடக்கும் தமிழை — குற்றுயிராய்க்கிடக்கும தமிழைக் கொல்லவா? வளர்க்கவா? எண்ணி முடிவு கூறுங்கள், ஏழைத் தமிழர்களே! இவற்றால் ஆரியக் கலைகளாலும், ஆங்கில ஆட்சியாலும் அருமைத் தமிழ்க் கலைகள் எங்கே? என்று கேட்கும் வகையில மறைந்து கிடக்கின்றன என்பதறிந்தோம. இனி ஒலிகளின்—எழுத்துகளின் பேரால் ஆரியர்களால் தமிழுக்குச் செயயப்படும கெடுதல்களைச் சிறிது கூறவிரும்புகிறோம.

தமிழ் ஒலிகளும், எழுத்துக்களும் கொலை செய்யப்படல்.

"தமிழில் சொற்கள் இருக்கும்போது வேறு மொழிச் சொற்களை எடுத்தாள்வது தமிழ்ச் சொற்களையும் தமிழையும் கொலைசெய்வதாகும்" என்ற தமிழறிஞர் கருத்தை மேலே விளக்கி உரைத்தோம. அக்கருத்தை ஏற்றுக் கொள்ளாது பார்ப்பனர்கள் வடமொழிச சொறகளைத் தமிழில் புகுத்தினார்கள். சொற்களோடுமட்டும் அவர்கள் நிற்கவில்லை. வட சொற்களின் ஒலியையுந் தமிழில் புகுத்தினார்கள். அவவொலிகட்கு ஏறபத்தமிழ் வரிவடிவிற்கு முற்றும் மாறான ஆரிய வரிவடிவினையும புகுத்தினார்கள். நன்னூலாசிரியர் வட சொற்களைத் தமிழில் புகுத்துவதற்கோர் வரம்பு

கட்டியிருக்கிறார்கள். அவ்வரம்பின்படி க்ரஹம் என்ற வட சொல்லைத் தமிழில் கிருகம் என்றே ஒலித்து வரிவடிவிலும் கிருகம் என்றே எழுதுதல்வேண்டும். அதாவது வட சொற்களின் ஒலியையும், வடிவத்தையும் தமிழ் ஒலியிலேயே கூறி தமிழ் வடிவத்திலேயே எழுதவேண்டும் என்பதே யாகும். இவ்வரம்பிற்குட்பட்டே பிற்காலத்தெழுந்த தமிழ் நூல்களில் ஹனுமான், அக்ஷரம், லக்ஷ்மி என்ற வடசொற்கள் அனுமான், அக்கரம், இலக்குமி என்றெழுதப்பட்டன. ஆரியப் பார்ப்பனர்களும் தம நூல்களில் இவ்வரம்பினைக் கையாண்டார்கள். ஆனால் ஆரிய வெறிபிடித்தாடும் இக் காலப் பார்ப்பனர்கள் யாவருந் தம் நூல்களிலுஞ் செய்தித் தாள்களிலும் தமிழ் வரமபை அழிக்க ஆரிய மொழியை வளர்க்க ஹம்ஸசம், சேவாஸதனம், விவாஹம், ஜேஷ்ட குமாரன், ஸ்வதந்தரம் என்றல்லவோ எழுதுகின்றனர். தொண்டர்கழகம், திருமணம், மூத்த மகன், உரிமை என்ற தமிழ்ச சொற்களிருக்க அவறறைக் கொன்று அதறகு விடையான ஸேவாசதனம் முதலிய வட சொற்களை எடுத் தாண்டது பெரும பிழை. அத்துடனில்லாது அவவட சொற்களைத் தமிழ் ஒலியில் ஒலித்து ஆரிய வடிவில் எழுதி யது எவவளவு பெரும்பிழை! கொடுமை, ஸ்வதநதரம் எனற வடசொல்லுக்குத் தமிழில ஒலியும வடிவுமில்லையே! ஆத லின அவ்வாறு ஒலித்து அவ்வாறெழுதினோம என்கினறார் கள். தமிழில் உரிமை என்று சொன்னால் இவ்விடர்ப்பாடு கள் ஒழியுமன்றோ? ஏன் ஆரியததிற கூறித தமிழில் ஒலி யில்லை, வடிவில்லை, என்று சொல்லவேண்டுமா? தமிழ் என்ற சொல்லை டமில் என்றே ஆஙகிலர் ஒலித்து ஆங்கில எழுத்து வடிவத்திலேயே அதனை எழுதுகினறனர். ழ் என்ற ஒலியும வடிவும ஆஙகிலத்திலில்லை என்பதற்காக ஆஙகிலத்தில புதி தாக ஒலிப்பதுமில்லை. புதிய எழுததை உண்டாக்குவது மில்லை. அவர்களைப் போல ஒலிப்பதே பெருமை, நாகரிகம் என்ற எண்ணத்தினாலே அறியாமையினாலோ சோம்பேரித் தனத்தினாலோ தமிழை ஒழிக்கும் நோககத்தினாலோ தமிழ் மக்களை தமது மொழிச் சொற்களை டமில, டின்னவிலி,

ட்ருப்பில்கேன், டேன்சூர் என்று கூறக் காண்கின்றோம் அன்றோ? ஆங்கிலம், சர்மனி, பிரஞ்சு இந்தி வடமொழி முதலிய மொழிகளில் உள்ள ஒலிகள், வடிவுகள், தமிழில் இல்லையே என்பதற்காகத் தமிழில் புதிய ஒலிகளையும் வடிவத்தையும வழங்கவேண்டுமென்று கூறும் பார்ப்பனர்கள், அவ்வாங்கிலம் முதலிய மொழிகளிலில்லாத தமிழ் ஒலி, வடிவுகளை ஆங்கிலம், வடமொழி, இந்தி முதலிய மொழிகளில் ஒலிக்கவும், எழுத்துக்களை ஏற்படுத்தவும் ஆண்மையிருந்தால் ஏற்பாடு செய்யட்டுமே. எலலா மொழிகளிலும் எல்லா மொழிகளுக்குமுள்ள ஒலிகளும், எழுத்துக்களும் சிறு பானமை வேறுபட்டே இருககும. இன்றியமையாத இரண்டொருவிடஙகளில் எழுத்துக்களை மாற்றாமல் பிற மொழிச சொறகளுக்கு ஏற்ற ஓசைக்குத் தம் மொழியிலுள்ள எழுத்துக்களைக்கொண்டே சிற்சில குறிப்புகள் காட்டி ஒலிக்கலாம. அதை விடுத்து ஆங்கிலததிலில்லாத ,வடமொழியிலில்லாத, இந்தியிலில்லாத ஒலி வடிவுகட்காக நூற்றுக்கணக்கான வேற்று மொழிகளின ஒலிவடிகளை அமமொழிகளில் எடுததாளவேண்டுமென்றால் அமமொழிகளின் நெடுஙகணக்கும, இலக்கணங்களும வரை துறையின்றிப் பெருகி அம்மொழிகளின் இனிமை, உரிமை, கலைகளன்றோ அழியும? இஃதுண்மையானால உலகிலுள்ள மொழிகளின ஒலி எழுத்துக்களைத் தமிழில் புதிதாக சேர்ப்பின் தமிழ் நெடுங்கணக்கும்,ஒலிகளும், கலைகளுங்கெடாதா? பிற மொழிகளிலுள்ள ஒலிகளும, எழுத்துககளும தம் மொழியில இல்லையே என்பதற்காக அவைகளைத தம மொழியில் ஆக்கிக்கொள்வோர் உலகில் யாருமிரார். இருக்கவும முடியாது. அங்ஙனமிருக்கப் பார்ப்பனர்கள் மட்டும் பிற மொழி ஒலிவடிவுகளைத் தமிழிற் கொள்ளவேண்டுமென்று கூறுவதேனெனில், தமிழ்தானே அது எவவாறாவது கெடட்டும், தமிழில் வடமொழியை புகுததவேண்டும். அதன் வழியாகத் தமது பொல்லாப பொய் மொழிந்த நேர்மையில்லாத தமக்கு நன்மையும், பிறருக்குத் தீமையும் தரும் மனுநீதிக் கோட்பாடுகளை நுழைக்கவெண்டும. அதன்

வழியாகத் தமிழர் நாகரீகத்தினை அழித்து ஆரியக்கலை நாகரீகங்களைத் தமிழர் தலையில் சுமத்தவேண்டும் தமிழை அழிக்கவேண்டும் என்பதனுலேயாம் என்க. இவற்ருல், தமிழ்க்கலை, நாகரீகங்களை அழித்தொழிக்க ஆரியர் செய்து வரும் செயல்களில் கூறிவருங் கருத்துக்களில 'பிறமொழிச் சொறகளின் ஒலி, எழுத்துக்களைத் தமிழில் ஆக்கவேண்டும் சேர்க்கவேண்டும்'' என்பதும் ஒன்ருகும் என்பதைக் காங்கிரசு தமிழர்கள் என்றறிவர்களோ?

அரசியல் மொழியே ஆக்கம்பெறும்.

தாய் மொழிகள் அரசியல் மொழியாக இல்லாது வேறறு மொழிகள் அரசியல் மொழியாக இருக்குமாளுல் அம் மொழிகள் ஆக்கமும், வளர்சசியும் பெறும்; தாய் மொழிகள் ஆக்கமும் வளர்சசியும குன்றி நாளடைவில் தேய்ந்து மாயந்து மாண்டொழியும். என்னை? பல நலங்களும் அரசியல் மொழியினுல் மட்டுமே கிடைக்குமாதலின் என்க " அரசன் எவவழி அவ்வழி குடிகள்'' என்ற பழமொழி இவ்வுண்மையை நன்கு விளக்குவதாகும். எடுத்துக்காட்டாக ஆங்கிலத்தை எடுத்துக்கொள்வோம. அஃது அரசியல் மொழியாக இருக்கின்ற காரணத்தால் அதனை நமமவர் யாவரும் பெரும் பொருள் செலவிட்டு மிக வருந்திப் பயில்கின்றனர். அம்மொழியை நினைவில் பதிவு செய்துகொள்ளுவதற்காக அம்மொழியில் உரையாடுகின்றனர், எழுதுகின்றனர். பலர் வேண்டுமென்றே ஆங்கிலத்தைக் கையாள்வது பெருமையும், நாகரீகமாம் என்று கருதி ஆங்கிலத்திலேயே கடிதமெழுதுகின்றனர். ஆங்கிலப புதுக் கதைகளையே வாங்கிப் படிக்கின்றார்கள். ஆங்கிலச் செய்திக் தாள்களையே போறறுகின்றனர் தமமில்லத்து சிறப்புக்களை ஆங்கிலத்திலேயே அச்சிட்டுத் தெரிவிக்கின்றனா. சிறு குழந்தைகளோடு ஆங்கிலத்தில் பேசுகின்றனர். தாய் மொழியில் கடிதமெழுதினுலும் ஆங்கிலததில் கையெழுத்திடுகின்றனர் ஆங்கிலச் சொறகளை ஏராளமாகத் தமிழிற் கலந்து பேசியும்

எழுதியும் வருகின்றார்கள். இதைப் பார்த்து ஆங்கிலந் தெரியாத தமிழர்களும் நாகரீகமென்று கருதித் தமிழ்ச் சொற்களை விட்டு ஆங்கிலச் சொற்களைத் தப்புந் தவறுமாக வேணும் தமிழிற் கலந்து பேசுகின்றார்கள். தாம் கையெழுத்துக்களிட நேர்ந்தால் ஆங்கிலத்திலேயே இடுகின்றார்கள். இவற்றால் பொதுமக்களிடத்தில் ஆங்கிலத்திற்குப் பெரிதும் மதிப்பேற்படுவதனால் அவர்கள் தொழில் நிலையங்களுக்கெல்லாம், ஹேர் டிரசிங் ஹோம், நியூ ரெஸ்டராரெண்ட, பிளவர் சோப், கணேஷ் அண்ட் பிரதர்ஸ் புக்ஷாப் மார்டன் புக் செல்லிங் ஹவுஸ், டிமபர் மெர்ச்செண்ட் கம்பெனி, சாயா ஓட்டல் என்றும், பண்டங்களுக்கு நரசுஸ் காப்பி பவுடர், ஹானியன் பஜ்ஜி, பொட்டட்டோ கட்லட் ஸ் விஜிடபிள்ஸ் கேக் என்றும், தம் வீடுகட்கு சன்வியூ, லேக் வியூ, வுட்லாண்ட், ஸ்டார் ஹவுஸ் என்றும், தம் குழந்தைகட்கு ரோஸ், பேபி, ஜேம்ஸ், ஜார்ஜ் என்றும், தம் நாய்களுக்கு ஜாக், டாம் என்றும், தாம்நடத்தும் பள்ளிக்கூடங்கட்கு லிட்டில் பிளவர் ஐ ஸ்கூல், நாஷனல் காலேஜ் என்றும் தாம் நடத்தும் கழகங்கட்கு ரெக்ரியேஷன்கிளப், பிரீதிங்கர் அசோசியேஷன் என்றும், தம் கட்சிகளுக்கு பார்வர்டுபிளாக் ஜஸ்டிஸ் பார்ட்டி, காங்கிரஸ் பார்டி, லேபர் பார்டி என்றும் நாட்டுச்சட்டங்கட்கு டெமபிள் எனடிரிபில், பிரொஹிபிஷன் சேல்ஸ் டாக்ஸ் என்றும் கூறியும் எழுதியும் வருகின்றார்கள். இவைமட்டுமா? தமிழ்ப் பெயரின் முன்னும் பின்னும் K. S மணி M. A என்று ஆங்கில எழுத்துக்களை ஆட்டும் தமிழ் விளம்பரங்களில் நோட்டீஸ் என்று ஆங்கிலத்தில் எழுதியும், தியாகராயநகர் to மைலாப்பூர் என்றுந் தமிழ்ச் சொற்களுக்கிடையில் ஆங்கிலச் சொல்லை வரைந்தும் வருகின்றார்கள். இவற்றோடமையாது ஏராளமான ஆங்கில சொற்களையுஞ் சொற்றொடர்களையுந் தமிழிற் கலந்து பேசியும் எழுதியும் வருகின்றார்கள். இப்படிச் செய்வதுதானா தமிழை வளர்ப்பது? என்று தமிழ் அபிவிர்த்தியாளர்களைக் கேட்கிறோம். இது கிடக்க மேற்கண்டவாறு தமிழர்கள் தமது திருமணம், விருந்து முதலிய சிறப்பிற்கு ஆங்கிலத்

தில்தான் அழைப்புகள் அச்சிட்டு வழங்கவேண்டுமென்றோ, தொழிற்சாலைகட்கு ஆங்கிலப் பெயர்களை வைக்கவேண்டுமென்றோ, ஆங்கில அரசியலார் கட்டாய சட்டஞ்செய்தாரல்லர் என்றாலும், ஆங்கிலத்திலன்றோ அழைப்புகள் வருகின்றன, பெயர்கள் வைக்கப்படுகின்றன. காரணமென்னை? அரசியல் மொழி—கட்டாய மொழி எதுவோ அதிலதான் மக்கள் மனஞ்செல்லும். அஃதியற்கை. ஆங்கிலம் அரசியல் மொழியாக—நிலைமை (உத்தியோகம்) க்குக் கட்டாயம் படிக்கவேண்டிய மொழியாக இருத்தலினால், அஃதிவ்வாறு ஆக்கம் பெறுவதும் நம் மொழியை அழிப்பதும் தடுக்க முடியாமல் நிற்கின்றது. ஒரு காலத்தில் என் இப்போதுங் கூட ஆரிய மொழி இவ்வாறு உயர்நிலையில் இருக்கவில்லையா? இருக்கின்றதல்லவா? இதுபற்றி முன்பே விரித்துரைத்திருக்கின்றோம். முற்கூறியவாறு ஆங்கிலத்தைக் கலவாது தமிழர் தம் வாழ்க்கையை நடத்தக்கூடாத நிலைமைக்கு வந்துவிட்டதறிந்தோம். இவ்வாறே ஒரு நூற்றாண்டு நடக்குமானால் தமிழ் மொழியும், தமிழர் நாகரிகமும், தமிழர் முன்னேற்றமும் கெடும் என்பதை மேலே விளக்கியுரைத்தோம். நிலைமைகளிலுள்ள நல்லோர் பலரை நாமறிவோம், அவர்கள் தமிழில் பேசப் பெரிதும் விரும்புகின்றார்கள்; முயல்கின்றார்கள் என்பதையும் அறிவோம். ஆனால், அவர்கள் தம் அரசியல் நிலைமை, தொழில் நிலைமை, சுற்றுப்புறச் சார்புகளால் தாம் கருதியவாறு தனித் தமிழில் பேச வியலாது தத்தளிக்கின்றனர். தொடர்ந்து ஆங்கிலர் வடமொழி கலவாது தனித் தமிழில் பேச அவர்களால் முடிவதில்லை. வடசொல்லிது தமிழ்ச்சொல்லிது என்று கூட அவர்களறியமாட்டார்கள். போதிய தமிழ்க் கல்விப் பயிற்சி அரசியலாரால் அவர்கட்கு அளிக்கப்படாமையால், இவர்கள்பால் ஓரளவு குறையுண்டென்பதை நாம் ஒப்புக்கொள்ளுகின்றோம். ஆனால், இதற்கெல்லாம் அடிப்படையான தவறு எங்கிருக்கின்றதென்று ஆராய்ந்து பார்த்தால், தமிழ் நாட்டில் அரசியல் மொழியாக கட்டாய பாடமாக ஆங்கிலம் அமர்ந்திருப்பதே காரணம் என்பது புலனாகும். வேண்டுவோர் ஆங்கி

லத்தை விருப்ப பாடமாகக் கற்றல் நல்லதே. ஆங்கிலம் கட்டாய பாடமாக அரசியல் மொழியாக இல்லாவிட்டால தமிழுக்கும் தமிழர் முன்னேற்றத்திற்கும் இத்துணை இடைஞ்சல்கள் நேர்ந்திரா. இதனால் அரசியல் மொழியாக அமர்ந்திருக்கும மொழியே ஆக்கமும் பெருமையும் அடையும என்பதும, தாய மொழிகள் அடங்கி ஒடுங்கித் தம் ஆக்கமும், பெருமையுங்கெட்டு அல்லற்பட்டிருக்குமென்பதும் தெற்றென விளங்குகின்றதன்றே?

இந்தியால் வட நாட்டவர் உயர்வார், தமிழர் தாழ்வார்.

வட மொழிக்குள்ள பெருமை பார்ப்பனர்களுக்காகி அதனால் பார்ப்பனருக்கு உறையுள (வீடு) அமைத்துக் கொடுப்பதும, அரசியல் நிலை (உத்தியோகம) கொடுப்பதும சத்திரம கட்டி உணவு கொடுப்பதும், அவர்களை உயர்ந்தோராய் மதித்துச சிறப்பிப்பதும, பண்டும், இன்றும வழங்குவதுபோல நாளை இந்தி மொழிக்குரிய வட நாட்டார்க்கு அவைகள் கொடுக்கப்படுமல்லவா? அப்படியல்லாவிட்டாலும வேறு வகைகளில் வட நாட்டார்க்குத் தலைமைகள் தரப்படலாமல்லவா? ஏன் இப்போதே பார்க்கலாமே! வட நாட்டுத் தலைவர்கள் நம மாகாணத்திலல இராஜகோபாலாசசாரியார், சத்தியமூர்த்தி போன்ற பார்பபனர்களைக் கூடத் தம மாகாணங்களில வரவேற்றுச சிறப்புகள் வழங்காமலிருக்க நம மாகாண பார்ப்பனர்களும், காங்கிரசாட்களும அவ்வட நாட்டுத் தலைவர்களை நம மாகாணத்திற்கொண்டு அவர்கட்கு தெய்வம் போலச் சிறந்த விழாக்கள் நடத்துவதும, அவர்கள் பெயரைத் தம புதல்வர்கட்கிடுவதும, அவர்கள் பெயரால் கழகங்கள் காண்பதும், படிப்பகங்கள் (வாசகசாலைகள்) அமைப்பதும, பூங்தோட்டங்கள உண்டாக்குவதும சிற்றுண்டி சாலைகள் வைப்பதும், கட்டிடங்கள் அமைப்பதும யாவரும அறிந்ததே இவைமட்டுமா? அவ்வடநாட்டுத் தலைவர்கள் படங்களைத் தாங்கித்தொழுது தெய்வபபடங்களுடன

வைத்து வழிபடுவதும், கல்லாலும் மண்ணாலும், வெள்ளியாலும், செம்பாலும் அவர்கள் தம் உருவங்களைச் செய்து வழிபாடுகளாற்றுவதும் நாமறிந்ததே. மற்றும் வடநாட்டவர்பால் நமக்குள்ள பெருமதிப்பை எத்தனை-எத்தனை வகைகளிலோ காட்டிக்கொண்டுவருகின்றோம். வட நாட்டாரைக் கண்டால் சுயராஜ்யத்தைக் கண்டதுபோல மகிழ்கின்றோம் அவர்கள் பெயர்களை, படங்களை, செயல்களைச் செய்தித்தாள்களில் ஏராளமாக விளம்பரங்கள் செய்கின்றோம். தங்களிடத்தில் நாம் கொண்டிருக்கும் குருட்டு பக்தியைக் கண்ட வட நாட்டார்கள் காந்திக் குல்லாயுடன் சென்னையிலும், தமிழ் நாட்டு நகரங்களிலும் வெற்றிலைப் பாக்குக் கடை, மிட்டாய்க்கடை, பலசரக்குக் கடை, புடவைக்கடை, பணக்கடை (பாங்க்), வட்டிக்கடை, பஞ்சாலை, மாவாலை, முதலிய கடைகளும், ஆலைகளும், நடத்துகின்றனர். அதனை பெரும் பொருள் கொடுத்து வடநாட்டுக்குக் கொண்டு செல்கின்றனர். இந்தி கட்டாய படிப்பாக இல்லாத காலத்திலேயே வட நாட்டாருக்கு நந்தமிழ் நாட்டில் இத்தனைச் சிறப்புமானால், கட்டாய இந்தி வந்து அதற்கு எதிர்ப்பும் இல்லாமல் தமிழியக்கமும் இல்லாமலிருந்தால், வடவரன்றோ நம் மாகாணத் தெய்வங்கள்? அரசர்கள்? தமிழ் நாட்டில் பார்ப்பனருக்குச் செல்வாக்கில்லை. அதனைப்பெற வட நாட்டாரைக்கொணர்ந்து அவர்களைச் சிறப்பித்து அவர்களால் தம்மைச் சிறப்பித்துக் கொள்ளுகின்றனர். அதனால் தமக்கும் தம்மவர்க்கும் செல்வமும், நிலைமையும், ஆணையும் பெற்றுவருகின்றனரன்றோ? இவ்வகையில்தான் மேலுந் தமக்குச் செல்வம், நிலைமை, ஆணைகள் தேடிக்கொள்ளவே பார்ப்பனர்கள் வட நாட்டு இந்தியைத் தென்னாட்டுக்குக் கொணர்ந்திருக்கின்றார்கள். ஆங்கில மொழியால் ஆங்கிலர்க்குப் பெருமதிப்பு ஏற்படுகின்றதன்றோ? அதுபோல இந்தியினால் வட நாட்டவர்க்குப் பெருமதிப் பேற்பட்டுப் போவதுறுதி. அதனால் வட நாட்டார் செல்வாக்கும் ஆணையும் தமிழ் நாட்டில் ஓங்கப்போவதுண்மை. இதனை மேலே விளக்கியுரைத்தோம். அவ்வாறு நந்தமிழ் நாட்டில்

வட நாட்டவர் செல்வாக்கும, ஆணையும் ஓங்க ஓங்க தமிழர் களின் செல்வாக்கு, ஆணையும் தாழ்ந்து தாழ்நதே செல் லும். இதையுணர்ந்தே இந்தியைத் தமிழர்கள் எவ்வாற்று லும எதிர்க்கின்றார்கள்!

இந்தியால் தமிழ் கெடும்.

வட மொழியால் ஆரிய நாகரீகம், கலைகள், தமிழர்களி டம் பரவித் தமிழர்க்குந்தமிழுக்குந் நேர்ந்துள்ள கெடுதல் களை மேலே விளங்க உரைத்தோம. அன்று வந்த வட மொழி இன்றும் நம் திருக்கோவில்—திருமணம் உள்ளிட்ட இடங்களிலும் சடங்குகளிலுநதமிழைத் தாழ்த்தி ஒதுக்கி விட்டுத்தான் ஆணையுடன் விளங்குவதை விளக்கினோம. அது போல இன்று வரும இந்தி நாளை நம்முடைய திருககோவில் களில் சடங்குகளில் புகுநது தமிழை ஒதுக்கிததான் ஆணை பெற்று விளங்கலாமனறோ? அதனால, நம தமிழின் நிலைமை கெடுமல்லவா? இநதி மொழியாளரின் வட நாட்டுக் கலை நாகரீகங்கள் கைக்கொள்ளப்பட்டுத் தமிழ்க்கலை நாகரீ கங்கள் தள்ளப்படலாமல்லவா? ஏன்? இப்போதே வட நாட்டார் உடுப்பது போல உடுப்பதே உயர்ந்த நாகரீகம் என்று கருதி நந்தமிழ் மக்களில் காங்கிரசாட்கள் சிலர் அவ் வாறு உடையணிந்து திரிய வில்லையா? இந்தி நூல்கள் இப் போதே ஏராளமாக விற்கப்படவில்லையா? வட நாட்டி லிருந்து வண்டி வண்டியாக இறக்குமதி செய்யப்பட வில் லையா? இனி, அவ்விந்திமொழி நூல்களைத் தமிழர்கள் மிகுதி யாகப்படிப்பார்கள். இந்தியில் பட்டம பெறபழக்கத்திற் காக என்று சொல்லிச் சொல்லி இந்தியிலேயே கடிதமெழுது வார்கள், உரையாடுவார்கள், பாட்டுப் பாடுவார்கள். (இப் போதே பாடத் துவங்கி விட்டார்கள்.) இவற்றால் இந்தி மொழிச் சொற்கள் நூற்றுக்கணக்கானத் தமிழ்ச் சொற் களை அழித்துத் தமிழில் தான் முதன்மையிடம் பெறும். முன்னமே, வட சொற்களும், ஆங்கிலச் சொற்களும் அள வின்றித் தமிழ்ச் சொற்களை மாய்த்த வரலாறனை மேலே விளக்கிக்காட்டினோம். இன்னும் இந்திமொழிச் சொற்கள்

அளவின்றித் தமிழ்ச் சொற்களை அழித்துத் தமிழில் புகுமானால் தமிழ்மொழி நாளடைவில் ஏன் கெடாது? அழியாது? பிறமொழிக் கலப்பால் தமிழ் ஒன்றே திரிக்கப்பட்டு மலையாளம் முதலிய மொழிகள் தோன்றிய வரலாற்றை மேலே விளக்கியுரைத்தோம். அதுபோல வடமொழி, இந்தி, ஆங்கிலம் ஆரியமொழிகளின் கலப்பால் தமிழ் கெட்டு அழிந்து வேறு மொழியாகியே தீருமன்றோ? இந்தி அரசியல் மொழியாக இல்லாத இக்காலததிலேயே தமிழ் நாட்டு நகரங்களிலெல்லாம் இந்தியை வளர்ப்பதற்கென இந்திப் பிரசாரசபைகளும், இந்தி கற்பிக்கும தரைப்பள்ளிக்கூடங்களும் ஏற்படுததப்பட்டிருக்கின்றனவே! பதினாயிரக்கணக்கான மாணவர்கள் அதனை வருந்திக்கற்கின்றனரே யன்றித் தமிழையா வருந்திக் கற்கின்றனரா? ஏன்? இந்தியைப் பார்ப்பனர்கள் எவ்வாறேனும் அரசியல் மொழியாக்கி விடுவார்கள் என்று மக்கள் அறிந்திருககின்றார்கள். ஆங்கிலம் அரசியல் மொழியாக இருக்கின்ற காரணத்தால் மாணவர் அனைவருந்தமிழில் கருததுச செலுத்துவதில்லை ஆங்கிலத்தையே கண்ணுஙகருததுமாகக் கற்கின்றார்கள். பெற்றோரும், மறறோரும், ஆசிரியரும், மாணவர்க்குத் தமிழ்க் கல்வியைவிட ஆங்கிலத்தையே பெரிதும் வற்புறுத்திக் கற்பிக்கின்றார்கள். அதனால் மாணவர் தமிழில் குறைந்த அறிவுடையவராகின்றதுமன்றித் தமிழில் ஆர்வத்தையும் மதிப்பையும் குறைத்துக் கொள்ளுகின்றார்கள். ஆங்கிலத்தில் ஆர்வமும் மதிப்பும் மிகுதியாகக் கொள்கின்றார். இது கண்கூடு. இதுபோலவே இந்தி அரசியல் மொழியானால் அதையன்றோ மாணவர்கள் ஆர்வமுடன் கற்று மதிப்பார்கள்; தமிழில் எங்ஙனம் அவர்கள் ஆர்வமும் மதிப்புங்கொள்வார்கள்? தமிழ்க் கலைகளைக்கறபார்கள்! மாணவர்களன்றோ எதிர் காலத் தலைவர்கள்? அவர்கள் உள்ளத்தில் இளமையிலேயே இந்திக்கு மதிப்பேறபட்டால் எதிர் காலத்தில் அவர்கட்குத் தம் மொழியிடத்தில் மதிப்பிருக்குமா? இந்தியில்தானே இருக்கும்? ஆங்கிலங்கற்ற தமிழர் தம் திருமணம் முதலிய சிறப்புகளை ஆங்கிலத்தில் அச்சிட்டு அழைப்புகள் விடுப்பதுபோல

இனி இந்தியிலன்றோ திருமண அழைப்புகள் அனுப்புவர்? விருந்தழைப்புகள் விடுப்பர்? தாம் நடத்துந் தொழிற்சாலைகட்கும், நிலையங்கட்கும் இந்தியிலன்றோ பெயரிடுவர்? கை எழுத்தும் இந்தியிலிடுவார் என்று இயம்பவும் வேண்டுமோ? சுருங்கச் சொல்ல வேண்டுமானால், கட்டாய இந்தியால், அரசியல் இந்தியால் ஒரு நூற்றாண்டுக்குள் தமிழர் ஹிந்தியர் ஆகிவிடுவார்கள்; வட நாட்டார்க்கு அடிமைகளாகி விடுவார்கள். வட மொழியால் ஆரியப்பார்ப்பனர்களும், ஆங்கிலத்தால் வெள்ளையர்களும் இந்நாட்டை ஆண்டு சீரும் சிறப்புஞ் செல்வமும் பெற்று விளங்குவதும், தமிழர்கள் சீருஞ் சிறப்புஞ் செல்வமுமின்றித் தன் மதிப்பிழந்து ஆண்மையிழந்து அவர்கட்கு அடிமைப்பட்டுக் கிடப்பதும் போல இந்தியினால் எதிர்காலத்தில் வட நாட்டவரும் பார்ப்பனருந்தமிழர்களை ஆள்வார்கள். செல்வமுஞ் சிறப்பும் பெற்று, தமிழர்களோ, ஆண்மையிழந்து—மதிப்பிழந்து அவர்கட்கு அடிமையாகி வறுமையுடன் வாழ்வார்கள்; நாளடைவில கெட்டழிவார்கள். அப்போது தமிழும் கெட்டழியுமன்றோ? தமிழர்களே! இதற்கிடங்கொடுக்கப் போகின்றீர்களா?

தமிழ் வாழ்க!

இந்நூலாசிரியரால்

இயற்றப்பட்ட

வேறு நூல்கள்.

தமிழ் நாடு தமிழருக்கே

மதமும் பொதுவுடைமையும்

(அச்சில்)

இந்நூல் கிடைக்குமிடங்கள்.

1 தமிழ்நெறி விளக்கப் பதிப்பகம்,
சேவ்வாய்ப்பேட்டை, சேலம்.

2 குடியரசு பதிப்பகம்,
ஈரோடு.

3 சைவசித்தாந்த நூற் பதிப்புக்கழகம்,
6-பவழக்காரத் தெரு,
மண்ணடி, சென்னை.

4 கிரீன் அண்ட் கோ,
533-ஐரோட், திருவல்லிக்கேணி,
சென்னை.

5 சைவசித்தாந்த நூற் பதிப்புக்கழகம்,
திருநெல்வேலி.

6 மறை. திருநாவுக்கரசு,
35, வில்லேஜ் ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை.